# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY. දිනක්කතිර්





உங்களின் சகல விதமான
அச்சுத்தேவைகளுக்கும்
இன்றே நாடுங்கள்

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

230, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
☎24821



ஒளி - 02 - கதிர் - 67 | 25.06.2001 | திங்கட்கிழமை | பக்கங்கள் - 08 | விலை ரூபா 5/-


## சுய விருப்பின் பேரில் வாக்களிக்க ஜே.வி.பி.தீர்மானம்

(நமது நிருபர்)

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் சுய விருப்பின் பேரில் வாக்களிக்கும் தீர்மானத்தை எடுத்துள்ளதாக ஜே.வி.பின் மத்திய குழு தெரிவித்துள்ளது.

ஐ.தே.கட்சினால் முன் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குமாறு ஐ.தே.கட்சியும் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குமாறு அரசாங்க சிரேஷ்ட அமைச்சர்களும் ஜே.வி.பி. தலைமைத்துவத்தை கோரிவருகின்றனர்.

இந்த நிலையில் சனிக்கிழமை கூடிய ஜே.வி.பி அரசியல் செயற்குழு உறுப்பினர்கள் சுய விருப்பின் பேரில் வாக்களிக்கும் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

இத் தீர்மானம் தொடர்பாக ஐ.தே.கட்சி வட்டாரங்கள் பாராட்டு தெரிவித்துள்ளன.

# பேரியல் உட்பட 3 எம்.பி .க்களை இடைநிறுத்த செயற்குழு தீர்மானம்

(நமது நிருபர்)

**கட்சிக் கட்டுப்பாடுகளை மீறி நடந்துகொண்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அமைச்சர் பேரியல் அஷ்ரப்; மருதூர்க்கனி; யு.எல்.முகைதீன் ஆகிய மூன்று எம்.பிக்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து இடைநிறுத்துவது என அக்கட்சியின் செயற்குழு சனிக்கிழமை கூடி முடிவு செய்திருக்கின்றது.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்சித் தலைமையகமான 'தாருஸலாமில்' ரவூப் ஹக்கீம் தலைமையில் நீண்ட நேரம் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே கட்சியின் செயற்குழு கூடி எடுத்த தீர்மானத்துக்குக் கட்டுப்படாமல் அதனை மீறி கட்சியின் கட்டுக்கோப்பைச் சீர்குலைக்கும் வகையில் நடந்துகொண்டதற்காக கட்சி உறுப்பினர்கள் மூவருக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் அனைவரும் வற்புறுத்தியதாகவும் அதனையடுத்தே அமைச்சர் பேரியல் அஷ்ரப், மருதூர்க்கனி, யு. எல்.முகைதீன் ஆகியோரை இடைநிறுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டதாகவும் 'தாருஸலாம்' வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் அணியைச் சேர்ந்த நான்காவது நாடாளுமன்ற உறுப்பினரான விமல வீரதிஸநாயக்க தேசிய ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்ட பெரும்பான்மை இனத்தவர் என்றும் கட்சி உறுப்பினர் அல்லாத அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இடம் இல்லை என்றும் கட்சிக் கூட்டத்தில முடிவெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை செயற்குழுவின் சிபார்சுக்கு அமைய அமைச்சர் பேரியல் அஷ்ரப்புக்கு கட்சியின் தவிசாளர் பதவி வழங்கப்பட்டிருந்தபோதும் அதனை ஏற்றுக் கொண்டதற்கான சம்மதக் கடிதத்தை அவர் இன்னமும் கட்சியின் பொதுச் செயலாளரிடம் வழங்கவில்லை என்றும் அதற்கான விளக்கத்தை அளிப்பதற்கு அமைச்சர் பேரியலுக்கு மூன்று நாள்கள் அவகாசம் வழங்குவது என்றும் மத்திய குழு முடிவு செய்திருக்கிறது.

## இருதயபுரத்தில் துப்பாக்கி சூடு பொலிஸ் கான்ஸ்டபில் படுகாயம்

(க.ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பு இருதயபுரத்தில் நேற்றுக்காலை இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் கான்டபிள் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு

(8ம் பக்கம் பார்க்க)

## 'தினக்கதிர்' வெற்றிக் கிண்ணம இக்னீசியஸ் அணிக்கு கிடைத்தது.

(அரியம்)

தினக்கதிர் ஓராண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட 'தினக்கதிர்'வெற்றிக் கிண்ண கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு 'இக்னீசியஸ்' விளையாட்டுக் கழகம் வெற்றிக் கிண்ணத்தை தட்டிக் கொண்டது.

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் கால்பந்தாட்ட இறுதி சுற்றுப் போட்டி நேற்று நடைபெற்றது.

பாடுமீன் விளையாட்டுக் கழகமும் இக்னீசியஸ் விளையாட்டுக் கழகமும் இறுதிச் சுற்றில் கலந்து கொண்டன.

விளையாட்டு நிறைவில் பரிசு வழங்கும் விழா நடைபெற்றது.மட்டக்களப்பு மாவட்ட கால் பந்தாட்டச் சங்கத் தலைவர் இராஜன் சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற விழாவில் பிரதம

(8ம் பக்கம் பார்க்க)


**கிழக்கு மாகாண மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

**இனி கொழும்புக்கு செல்ல தேவையில்லை. சமூக ஒளி எம்.எச்.எம்.பாறுக் அவர்களின் 20ஆண்டுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சேவையில் பெண்களுக்கு இலவசமாக தலைநகரில் மட்டும் அல்லாது கிழ்க்கு மாகாணத்திலும் முஸ்லிம், முஸ்லிம் அல்லாத பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் ஒளி வீசுகின்ற அரச அங்கீகாரம் பெற்ற ஒரே ஸ்தாபனம்.**

**ஆண்களுக்கு...........**

* TILE PIXER,
* MASON,
* CARPENTER,
* PIANTER,
* ELECTRICIAN,
* ELECTRONIC TECHNICIAN.

போன்ற வேலை வாய்ப்புக்கள் உண்டு.

**மேலதிக விபரங்களுக்கு:**

Fahim Enterprises (Pvt) Ltd,
152/1,152/2.Main street,
Kattankudi.

**அனுமதி இல.1755**

advt


## தினக்கதிர் ஆதரவு கலை கலாசாரப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள்

(நமது நிருபர்)

தினக்கதிர் பத்திரிகையின் ஓராண்டு நிறைவையொட்டி தினக்கதிர் ஆதரவுடன் எருவில் இளைஞர் கழகமும் கண்ணகி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்திய கலைகலாசாரா போட்டிக்கான பரிசளிப்பு வைபவம் நேற்றைய தினம் மட்/எருவில் கண்ணகி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

காலை 9 மணிக்கு இளைஞர் கழகத் தலைவர் சுந்தர்

(8ம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் பற்றி புலிகள் அறிவிப்பு

(வவுனியா)

மணகிண்டிமலை தலப்பையாறு இராணுவ முன்னணி காவலரண்கள்மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் எனவும் இத் தாக்குதலில் தமது தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை எனவும்

இதன் போது பின்வரும் ஆயத தளபாடங்கங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## எமக்கு எதிராக சதி தொடர்கிறது

(நமது நிருபர்)

காரணம் எதுவும் கூறாமல் அமைச்சரவையில் இருந்து என்னை வெளியேற்றிய பின்பும் எனக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் எதிரான சதி முயற்சிகள் தொடர்கின்றன. சதிகளைக் கண்டு நான் அஞ்சமாட்டேன். பின்வாங்கவும் மாட்டேன். கட்சியை முன்னெடுத்துச் செல்வேன்.

இவ்வாறு கூஷுரைத் துள்ளார் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்.

(8ம் பக்கம் பார்க்க)

**ஏக்கனைப் பாரம்பரம்**

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு கவிழ்ந்தால் சமாதானம் கதவு மூடப்படும்

**செய்தி**



அப்படியெண்டா இவ்வளவு காலமும் மூடாம திறந்தா கிடக்குது..........

## காத்தான்குடியில் பொலிஸ் கான்ஸ்டபிள் சுட்டுக் கொலை; தேடுதலில் இளைஞர் பலி!

(எஸ்.கமலதாசன்)

காத்தான்குடியில் நேற்று இனந் தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்

காத்தான்குடி 'குட்வின்' சந்திக்கருகாமையில் இடம் பெற்ற இச் சம்பவத்தை தொடர்ந்து பொலிசாரும் விஷேட அதிரடிப்படையினரும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இத் தேடுதலின் போது தமிழ் இளைஞர் ஒருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இறந்தவர் விடுதலைப்

(8ம் பக்கம் பார்க்க)

# தினக்கதிர்

த.பெ. இல: 06
155, திருமலை வீதி ,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554
E-mail :- tkathir@sltnet.lk


## இறைவனே தீர்மானிக்கட்டும்

எப்படியோ அண்மை நாட்களில் நடந்தேறியுள்ள சில சம்பவங்கள் இலங்கையின் பேரின வாதிகளுக்கு ஓர் மாபெரும் வெற்றியை ஈட்டித்தருவதாக அமைந்து விட்டது.

இலங்கை நாட்டின் சிறுபான்மை இனங்கள் எனத் தான் கருதும் இனங்களை, ஒன்று சேர விடாமல், அவர்களிடையே பிளவுகளை உண்டாக்கிச் சிதறச் செய்வதன் மூலம், தம்முடைய பெரும்பான்மை இன ஜனநாயகத்தைக் காத்துக் கொள்வதில் இலங்கையில் மாறி மாறி ஆட்சிபீடமேறும் அரசுகள் கண்ணும் கருத்துமாக செயற்பட்டு வந்துள்ளன.

இவர்களின் இந்த அரசியல் சாணக்கியங்களுக்குப் பலியாகிப் போன எங்களுடைய தமிழ்த் தலைமைத்துவங்கள் பலவற்றை நாம் வரலாற்றில் கண்டிருக்கின்றோம்.

இந்த வரிசையில் இலங்கைப் பேரினவாதிகளுக்கு அண்மையில் கிடைத்த ஒரு மாபெரும் வெற்றியாக, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் தற்போது தோன்றியுள்ள முரன்பாடு அமைந்துள்ளது.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வில்லை என அரசை விமர்சித்த காரணத்தால், காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அமைச்சர் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டதை யடுத்து இப்போது முஸ்லிம் காங்கிரஸ் இரு அணிகளாகப் பிரிந்து நின்று கருத்து வெளியிட்டு வருகின்றன.

கரையோர மாவட்டம் உள்ளிட்ட, தமக்கு வாக்குறுதி யளிக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததாலேயே, தான் அரசை விமர்சிக்க வேண்டி ஏற்பட்டதாக ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு அரசு அளித்த இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணங்களாலேயே, தாம் அரசை விட்டு வெளியேறும் நிலை தோன்றியுள்ளதாகவும் அவர் கூறிவுள் ளார்.

இதே வேளை ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட, அவர் சார்பான முஸ்லிம் காங்கிரஸ்குழுவுக்கு மாறாக தொடர்ந்து அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கத் தீர்மானித்துள்ள பேரியல் அஷ்ரப் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் குழு சார்பாகக் கருத்து வெளியிட்டுள்ள யூ.எல். எம். ஹனீபா(மருதூர்க்கனி)

கல்முனை நிர்வாக மாவட்டத்தையும், ஒலுவில் துறை முகத்தையும் பெறுவதற்காகவே தாம் தொடர்ந்து அரசுக்கு ஆத ரவு வழங்கத் தீர்ாமனித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

சிங்களப் பேரின வாதிகளை ஓரம் கட்ட அரசுக்கு உதவி சிங்களப் பெரும்பான்மையினரின் ஆதரவுடன் தமது கோரிக்கைகளை வென்றெடுக்கப்போவதாகவும் கூறியுள்ள அவர்,

ரவூப் ஹக்கீம் அவசரப்பட்டு விட்டார் என்றும் "இறைவா இவர்கள் அறியாமல் செய்கிறார்கள், இவர்களை மன்னித்து நேர்வழியைக்காட்டு" என்று பிரார்த்திப்போம் என்றும் அறிவுரை கூறியுள்ளார்.

இரு தரப்புமே ஒரே கோரிக்கைகளையே முன்வைக் கின்ற அதே வேளை, அதைக்காரணங்காட்டியே அரசுடன் ஒட்டிக் கொள்ளவும், விலகிக் கொள்ளவும் நியாயம் கூறுகின் றன.

'ஒரே ஊருக்கு இரண்டு பாதை' என்பது போல இரு பிரிவுகளும் வெளியிடும் கருத்துக்கள் அமைந்துள்ளன.

ஆனால் இந்த இரண்டு பாதையும் ஊர் போய்ச் சேர்வதற்கான பாதைகளா அல்லது தமது அரசியல் வாழ்வைக்காப்பாற்றுவதற்கான சுயலாபப் பாதைகளா என்பது அவர்கள் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறும் மக்களுக்குத் தெரியும். காலம் சென்ற அமைச்சர் அஷ்ரப் இறப்பதற்கு முன்னர், பொமு ஜன ஐக்கிய முன்னனியிலிருந்து விலகத் தீர்மானித்தார் எனவும், அவரது எண்ணப்படி நடந்திருந்தால் இன்று இந்நிலை வந்திருக்காது எனவும் ஹக்கீம் அங்கலாய்க்க,

'சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய தேசியத் தலைவர் சந்திரிகாவே' என அஷ்ரப் பல தடவை கூறியதாக மருதூர்க்கனி கூறுகிறார்.

மொத்தத்தில் முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற (ஒரு) கட்சிக்கு வாக்களித்த மக்கள் எது உண்மை, எது பொய் எனத் தெரியாமல் குழம்பிப் போயுள்ளனர்.

மருதூர்க்கனி கூறியது போல, ''இறைவா இவர்கள் அறியாமல் செய்கிறார்கள், இவர்களை மன்னித்து நேர்வழியைக்காட்டு'' என வெறுமனே மக்கள் பிரார்த்திக்க வேண்டியதுதான்

யாரை மன்னித்து நேர்வழிகாட்டுவது என்பதை இறைவனே தீர்மானிக்கட்டும்.

# வேரித்தாஸ் தமிழ்ப்பணி

## உண்மையினதும் மனிதத்துவத்தினதும் குரல்


**வேரித்தாஸ் தமிழ்ப்பணியின் "வெள்ளி விழா - உறவுச் சங்கமம்" நேற்றைய தினம் தமிழகத்தின் திருச்சியிலும், வன்னி மல்லாவியிலும் நடைபெற்றது. அதையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

இறை மதிப்பீட்டில் புதிய உலகு படைக்க பிலிப்பின்ஸ் தலைநகர் மணிலாவிலிருந்து ஒலிபரப்பாகும் வேரித்தாஸ் தமிழ்ப் பணிக்கு இது வெள்ளிவிழா வருடம். ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமைக் குரலாய் ஒலித்திடும் வேரித்தாஸ் தமிழ்ப்பணி, தர்மத்தின் பாற்பட்டு நீதியான சமாதானத்திற்காகப் போராடும் ஈழத்தமிழ் மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டி நிற்பது அதன் மனிதத்துவ விழுமியத்தையே எடுத்தியம்புகிறது.

இலட்சியப் பாதையில் இருபத்தைந்து வருடங்களைக் கடப்பது என்பது எத்தகைய சாதனை என்பது ஈழத்தமிழர்களுக்கு தமது தேசிய போராட்ட சக்தியினது வரலாறு மூலம் நன்கறிந்து கொள்ள முடியும். இவ்வாறான சிறப்புக்குரிய தனது வெள்ளி விழாவை நேயர்களைச் சந்தித்து கௌரவப்படுத்தும் "உறவுச் சங்கம்" ஆக வேரித்தாஸ் தமிழ்ப்பணி நேற்றைய தினம் தமிழகத்தின் திருச்சியிலும், வன்னியின் மல்லாவியிலும் ஏற்பாடு செய்திருந்தமை சிறப்பிடம் பெறுகிறது.

வேரித்தாஸ் தமிழ்ப்பணி வெள்ளி விழாவைச் சிறப்பிக்கும் இத்தருணத்தில் அதனது வரலாற்றை மீட்டுப் பார்ப்பதும் பொருத்தமானதாகும்.

"வேரித்தாஸ்" **(VERITAS)** என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் பொருள் "உண்மை" என்பதாகும். 1969 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம்ஆம் நாள் "ஆசிய கத்தோலிக்க கிறிஸ்தவ ஆயர் பேரவை" கூட்டமைப்பால் "வேரித்தாஸ் ஆசியா" (VERITAS ASIA) சிற்றலை வானொலி நிலையம், பிலிப்பைன்ஸ் தலைப்பட்டினமான மணிலாவில் நிறுவப்பட்டது. உண்மையின் குரலாய் ஓங்கி ஒலித்தல்; அன்பு, நீதி, சமத்துவம், அமைதி ஆகிய உயர் மதிப்பீடுகளை மக்களிடையே வளர்த்தல்; ஆசியப் பகுதிகளின் மொழி, கலாசாரப் பாரம் பரியங்களை பாதுகாத்தல் ஆதியன வேரித்தாஸ் ஆசியாவின் உயர் நோக்கங்களாக அமைந்திருக்கின்றன. இதன் நிர்வாக நடுவப் பணியகம் மற்றும் கலையகம் மணிலாவிலுள்ள "கெயெசான்" நகரிலும் (QUEZON CITY), ஒலிபரப்புக் கருவிமையம் மணிலாவிலிருந்து 400 மைல் தொலைவிலுள்ள "பலிவிக்" என்ற 1000 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. வேரித்தாஸ் ஆசியாவின் தமிழ் ஒலிபரப்பு ("தமிழ்ப்பணி") 1976 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01ம் நாள் ஆரம்பிக்கப்பட்டது. வேரித்தாஸ் தமிழ்ப்பணியின் முதல் பொறுப்பாளராய் பணியாற்றிய திரு. ம.அ.சாமி அவர்களின் பங்களிப்பு சிறப்பிடம் பெற்றுள்ளது. அதன் பின் செபாவும் தற்போது அருட்திரு ம.ஜெகத் கஸ்பார் அடிகளாரும் திறம்பட நடுவு நிலைமையுடனும் பணியாற்றி வருகின்றார். தமிழ்ப் பணியின் தயாரிப்பாளர்களாக ரவிபெர்னார்ட், மார்கரட் செலின், புளோரா ராணி, றைசல், செலிஜன் மேரி, ரூபி, மார்மல், வி.மகிழன், சி.ஆன்டோ ஆகியோரும் உழைப்பால் உரமூட்டியிருக்கின்றனர்.



மணிலா நிர்வாக நடுவப் பணிமையம்

வேரித்தாஸ் தமிழ்ப் பணியின் அத்தனை நிகழ்ச்சிகளும் தரம் வாய்ந்தனவாகவும் மனித உயர் விழுமியங்களை வளர்த்தெடுப்பனவாகவும், தாழ்வு மனப்பான்மைக் கருத்துக்களைத் தகர்த்தெறிந்து ஆளுமையை, சமுதாய நல்லிணக் கட்டியெழுப்புவனவாகவும் அமைவது வெள்ளிடைமலை. காலை மாலை என அரைமணி நேர நிகழ்சிகளை வழங்க "சாந்தோம் கலைத் தொடர்பு நிலையம்" உற்றதுணை வழங்கிவருவதும் பாராட்டுக்குரியது.





உலகச் செய்திகள், உண்மையின் எண்ணங்கள், உறவுப் பாலம், நாடகங்கள், நேர்காணல்கள், இதயம் இணைகிறது, வந்ததும் தந்ததும், வெற்றி முரசு, சங்கே முழங்கு, இதயங்களுக்காக இசைத் தேன்..... என இன்னோரன்ன பல நிகழ்ச்சிகளை குறுகிய நேரத்தில் வழங்கி பாரிய பண்பாட்டுப் பணி புரிகிறது தமிழ்ப்பணி. 1990களின் பின்பே புலம்பெயர் ஈழத்தமிழர்களின் சிற்றலை தமிழ் ஒலிபரப்புகள் இடம் பெற்றன. அதற்கு பல வருடங்கள் முன்பிருந்தே ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் நடுநிலையான உண்மைச் செய்திகளைத் திரட்டித்தர என்றும் தமிழ்ப் பணி தயங்கியிருக்கவில்லை. தமிழ்ப்பணியின் இனிய இதயங்கள் சான்று பகரும்.

சனிக்கிழமை இரவுகளில் "உண்மையின் எண்ணங்கள்" எனும் திறனாய்வு நிகழ்ச்சி சமகால முக்கியத்துவம் கொண்ட விடயங்கள் தொடர்பாக தமிழ்ப்பணியின் கருத்தை பாரபட்சமின்றித் தெளிவாக எடுத்துக்கூறும். "உண்மையின் எண்ணங்கள்" பலதிலும் ஈழத்தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாக மிக ஆழமான, ஆக்கபூர்வமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன; முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதில் "சத்ஜெய" நடவடிக்கையைத் தொடர்ந்து ம.ஜெகத்கஸ்பார் வழங்கிய "கிளிநொச்சி கிலிநொச்சியாகும்" என்ற உண்மையின் எண்ணங்கள் இன்றும் நினைவில் நிற்கிறது.

ஈழத்துத் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒவ்வொரு முக்கிய காலகட்டத்திலும் வேரித்தாஸ் தமிழ்ப்பணி தன்னாலியன்ற தன் சக்திக்குட்பட்ட பணிகளை ஆற்றி வந்துள்ளமையை ஈழ வரலாறு என்றும் போற்றிப் பேணும். ஈழத்தமிழரின் போராட்ட ஆதரவு நிலைப்பாடு எடுத்ததின் காரணமாக ஆக்கிரமிப்பாளர்களின் பல்வேறு நெருக்குவாரங்களை காரணமான சோதனைகளையும் தாங்கி, தாண்டி வந்துள்ளமையிட்டு தமிழின உணர்வுள்ள ஈழத்தமிழர்கள் என்றும் நன்றியுடையவர்களாகவே இருப்பார்கள்.

வேரித்தாஸ் தமிழ்ப் பணியின் இருபதாண்டு நிறைவை யிட்டு வெளியிட்ட "இலட்சியப் பாதையில் 20 ஆண்டுகள்" என்ற வர்ணப் பிரசுரத்தில், 1995 அக்டோபர் யாழ், வலிகாம மாபெரும் இடம் பெயர்வு தொடர்பான வர்ணப் புகைப்படங்களை பிரசுரித்து ஆவணப்படுத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது. தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் தின உரையை ஒவ்வோர் ஆண்டும் ஒலிபரப்பி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**கே.ரி.பி.ஷாந்தன்**

மேலும், வன்னிபெருநிலப் பரப்பு மீதான ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் அநீதியான முற்றுகைக் குட்பட்ட ஈழத்தமிழர்களின் இன்னல் போக்கவென தமிழர் புனர்வாழ்வுக் கழகம், பிரான்ஸ் T.R.T வானொலி நிலையம் என்பவற்றுடன் இணைந்து கிறித்தவர்களின் புனித வெள்ளியை முன்னிட்டு நடத்திய "புனித வெள்ளி துயர் துடைப்பு வாரம்" என்ற நிதி சேகரிப்பு நிகழ்ச்சியை நடத்தி

(3ம் பக்கம் பார்க்க)

# தலைவர் ரவூப் ஹக்கீம் எடுத்த முடிவு சரியானதே

## ஸ்ரீ.ல.மு.கா.லண்டன் கிளைத் தலைவர் அறிக்கை

(காரைதீவு நிருபர்)

"ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தேசியத் தலைவர் கௌரவ ரவூப் ஹக்கீமினால் இலங்கை முஸலீம் மக்களின் உறுதியான் அரசியல் எதிர்காலத்தின் நன்மை கருதி, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கான ஆதரவை மீளப் பெற்றுக் கொண்டமையினை இட்டு நாங்கள் மிகவும் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறோம்" என்று ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் லண்டன் கிளைத் தலைவர் எஸ்.எம்.ஹலீம் மாக்கார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

எமது ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் இன்றைய தலைமைத்துவமானது எவ்வித அற்ப சலுகைகளிற்கும் சிரம் சாய்க்காததும், ஆளுமையுள்ளதும் ஆகும். தங்களிற்கு வேண்டிய சமயத்தில் முஸ்லீம் மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைப்பதும் பின்னர் அவ்வாறு இனங் கண்டும் பாராமுகமாக இருப்பதும், எங்கள் /கொள்கை அடிப்படையிலான கோரிக்கைகளை இழுத்தடிப்பதும் நயவஞ்சக அரசியலும், கேலிக்கூத்தும் ஆகும். இவ்வாறான ஒரு சீரற்ற அரசாங்கத்தில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பது எமது தலைவரிடத்தில் எப்போதும் ஒரு திருப்தியற்ற செயலாகவே காணப்பட்டது.

எமது அமைப்பு எமது நாட்டின் இனங்களிற்கு இடையிலான சமாதான முயற்சிகளில் ஜனநாயக ரீதியில் எப்போதும் பங்கேற்றே உள்ளது. அதே சமயம் முஸ்லீம் மக்களை வெறும் பகடைக் காய்களாய் எவரும் உபயோகிக்க அனுமதிக்காது என்னும் எடுத்துக் காட்டே இன்றைய தனித்தச் செயற்படும் முடிவும் ஆகும். நாம் இந்த நாட்டில் வாழும் முஸ்லீம்கள் ஒரு சுயநலமற்ற தலைமைத்துவத்தைப் பெற்றுள்ளோம். இதனையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எமது மக்களின் சத்தியவாக்குகளை பெற்று, பின்னர் அதற்கு எதிராகச் செயற்படும் சில சுயநல அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற போக்கினை எம் மக்கள் நன்றாக இனங்கண்டு விட்டனர்.

எமது பெரும் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் திடீர் மறைவின் பின் சில தவிர்க்க முடியாத சந்தர்ப்ப சூழ்நிலைகளால் எமது அமைப்பினால் ஒரு சிலரை பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சராகவும் எம்மால் அனுப்ப நேர்ந்தது நாம் யாவரும் அறிந்த விடயமாகும். அவ்வாறு எமது அமைப்பினால் உருவாக்கப்பட்ட சிலரின் சுயநலப் போக்கு எமது அமைப்பின் அந்தஸ்தைக் குறைக்கும் செயல் மட்டுமன்றி, இந்நாட்டு முஸ்லீம்களின் அரசியல் சுதந்திரத்தினை மறுக்கும் வகையிலான பொறுப்பற்ற செயற்பாடு என்பதனையும் எம்மக்கள் நன்கு விளங்கிக் கொண்டுள்ளனர்.

பரிணாமம் அடைந்து கொண்டு செல்லும் இந்நவீன உலகில், இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் பெற்றுத் தந்துள்ளமை என்பது எம் மக்களால் நன்கு உணரப்பட்ட உரு விடயமாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது வெறும் அமைச்சுக்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் பெற்றுக் கொள்வதற்காக அல்ல. மாறாக எமது முஸ்லீம் சமூகம் சகல உரிமைகளுடனும் இந்நாட்டில் வாழ்வதற்காகவே என்பதனை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

# வெல்லாவெளியில் கொள்ளை

## உற்சவம் நடைபெறவில்லை ரத்து

(அரியம்)

வெல்லாவெளி ஸ்ரீமாரியம்மன் ஆலயத்தில் பணமும் நகையும், தங்கத்தகடும் களவாடப்பட்மையினால் நேற்று இடம் பெறவிருந்த வருடாந்த உற்சவம் இடம் பெறவில்லை.

கடந்த வெள்ளி இரவு இவ்வாலயத்திற்குச் சென்ற கொள்ளைக் கோஷ்டியினர் இவ்வாலயத்தில் கடமை புரியும் இருவரை வாயில் துணியைத் திணித்துக் கட்டி வைத்து விட்டு ஆலயத்தினுள் புகுந்து மூலஸ்தான அறையில் விக்கிரகத்தின் அடியில் இருந்த தங்கத்தகட்டையும் பெட்டகத்தினுள் இருந்த நகைகளையும், உண்டியல் பணத்தையும் களவாடிச் சென்றனர்.

தங்க நகைகள் 9பவுண்கள் 30 ஆயிரம் ரூபா பணம், மற்றும் ஆலய சாறிகளும் இவ்வாறு களவாடப்பட்டுள்ளதாக மண்டூர் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. உற்சவம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

# ஆங்கில ஆசிரியர் நியமனம்

(காரைதீவு நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாண கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் பணி தாமதமடைந்து வருகிறது.

பிரஸ்தாப ஆசிரியர்களுள் க.பொ.த(சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் 'டி' சித்தியும், க.பொ.த (உ/த) சித்தியும் உள்ளவர்களை உடனடியாக நிரந்தரமாக்குவது என்ற அவசர அவசரமாக வலயங்கள் தோறும் நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டது.

இப்பரீட்சை நடாத்தப்பட்டு 06 மாத காலமாகியும் இவர்களுக்கு இன்னும் நிரந்தர நியமனம் வழங்க வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லையென்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனைக் கல்வி மாவட்டத்தில் 40 பேர் இவ்விதம் பாதிக்கப்பட்டுள்ளனர். சம்மாந்துறை வலயத்தில் 20பேரும், அக்கரைப்பற்று வலயததில் 12 பேரும், கல்முனை வலயத்தில் 08 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை தேசிய கல்வி நிறுவகம் நடாத்திய திட்டமிட்டிருந்த கல்வி மாணி பட்டப்படிப்பு நெறிகள் (பிராந்திய ரீதியில்) இன்னும் ஆரம்பிக்கப்படாமல் திட்டமிட்டு தாமதப்படுத்தப்பட்டு வருகிறது.

கல்முனைப் பிரிவில் சுமார் 70 ஆசிரியர்கள் இவ்விதம் நேர்முகப் பரீட்சையில் தெரிவாகிப் பயிற்சி நெறிக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

# அரசின் அழைப்பு நிராகரிப்பு

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு தம்மை சந்திக்கும்படி விடுத்த அழைப்பை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் மட்ட உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் நிராகரித்துள்ளனர்.

இவ் அழைப்பினை அரசு தம்மை நேற்று பி.ப.2.00 அளவில் சந்திக்கும்படி விடுக்கப்பட்டதை நிராகரித்த அவர்கள் றவூவ் ஹக்கிம் மீது அபாண்டமான குற்றச் சாட்டுக்களை சுமத்திய அரசுடன் பேசுவதற்கு தாங்கள் விரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

# வீரச்சோலை மக்கள் இன்று சத்தியாக்கிரகம்

(காரைதீவு நிருபர்)

வீரச்சோலை கிராம தமிழ் மக்கள் இன்று (திங்கட்கிழமை) நாவிதன்வெளி பிரதேச செயலக முன்றலில் சத்தியாக்கிரகமொன்றை நடாத்த திட்டமிட்டுள்ளனர். தமக்குரிய நிருவாக அலுவல்கள் அனைத்தும் நாவிதன் வெளிப் பிரதேச செயலகத்துடன் இணைக்கப்படவேண்டும் என்று கோரி இச் சத்தியாக்கிரகம் நடாத்தப்படவுள்ளது.

நாவிதன் வெளி பிரதேச செயலகப் பிரிவுகக்குட்பட்ட வீரச்சோலை கிராமத்தின் சில நிருவாக வேலைகள் நாவிதன் வெளிப் பிரிவிலும், சில வேலைகள் சம்மாந்துறை பிரதேச செயல்கத்திலும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

வீரச்சோலைக்குரிய கிராம சேவை அலுவலர் நாவிதன் வெளிப் பிரிவிலுள்ளார். சமூர்த்தி வங்கிக் கணக்கை ஆரம்பிக்க இன்று சம்மாந்துறைக்கு வருமாறு பிராந்திய மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். "நாம் சம்மாந்துறைக்கு வரப் போவதில்லை எமக்கு தீர்க்கமான முடிவை தரும் வரையில் இங்கே சத்தியாக் கிரகம் இருப்போம்" என்று வீரச்சோலை பிரமுகரொருவர் குறிப்பிட்டார். இங்கு 148 குடும்பங்களைச் சேர்ந்த 675 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

இன்றைய சத்தியாக்கிரகம் பற்றி அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிறிவர்த்தன குணசேகரம் சங்கர் எம்.பி. ஆகியோரிடமும் அறிவிக்கப்பட்டுள்ளது:

# வேரித்தாஸ்......................

*(2ம் பக்க தொடர்ச்சி)*

மனிதாபிமானப் பணியில் தமிழ்ப் பணி இன்னும் மேலே உயர்ந்தது.

"உறவுப்பாலம்" என்ற நிகழ்சியூடாக ஈழத்திலும் புலத்திலும் பிரிந்து போன உறவுகளை இணைக்கும் புனிதப்பணியையும் ஆற்றி வருகின்றது. பிரதி செவ்வாய் இரவுச் செய்திக்கு முன் ஒலிபரப்பாகும் "பிரார்த்தனை"யின் இறுதியில், "எம் ஈழத்து உடன் பிறப்புக்களுக்காய் ஜெபிக்கிறோம். நலமான வாழ்வை மறுவிறப்பிலே அல்ல இப்பிறப்பிலேயே கொடு, ஆயிரமாயிரம் ஆண்டுகளாய், பூர்வீகமாய் வழ்ந்த மண்ணில் அநாதைகளாக்கப்பட்ட [illegible] முடிந்து போவதாக; பெற்[illegible] மழலைகளை பசிக்கும் [illegible] கடும் குளிருக்கும் [illegible] இராணுவ இயந்திரத்தின் அராஜகத்தால் அழுது கண்ணீர் வடித்து அடக்கம் செய்கிற அவகாசம் கூட இல்லாது போன அக்கிரமம் அழிந்து போவ்தாக; சுதந்திரத்தின் சுடர் விளக்கை எம் ஈழத்துத் தமிழ் மக்களுக்கு விரைவாய் காட்டு; விடுதலைக் கீதங்களை எல்லா நாவுகளும் பாடச் செய்!" என்று ஜெகத்கஸ்பார் அடிகள் கூறும் போது எங்கள் துன்பங்கள் பறந்து போய் தேச விடுதலைப் பயணத்தில் எங்கள் நெஞ்சங்கள் உரமேறுகின்றன.

ஒட்டுமொத்தத்தில் வேரித்தாஸ் தமிழ்ப்பணி உண்மையினதும் மனிததுவத்தினதும் உரத்த குரலாக ஒலிக்கிறது என்றால் அது மிகையன்று. "வெள்ளி விழா உறவுச் சங்கமம்" காணும் தமிழ்ப் பணிக்கு வெள்ளி விழா வாழ்த்துக்கள்!

# பட்டிருப்பு கல்வி வலயமட்ட தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

**பேச்சு**(பிரிவு -1) நிலை-1 வ.விஜிதரன்(முதலைக்குடா ம.வி), நிலை-2 ஜெ.சுஜாகன் (பட்டிருப்பு ம.ம.வி), பேச்சு(பிரிவு -2) நிலை-1 சி.துஸ்சன்(மண்டூர் ம.வி), நிலை-2 இ.நிலோனி(கல்முந்தல் தி.வித்), நிலை-3 வ.கலிஸ்கா(அம்பிளாந்துறை க.ம.வி), பேச்சு(பிரிவு -3) நிலை-1சி.ஹதர்சினி(பெரிய போரதீவு பா.வித்), நிலை-2 க.ஹர்சினி (களுவாஞ்சிகுடி ச.வித்), நிலை-3 சி.சிவரூபன்(அம்பிளாந்துறை க.ம.வி) பேச்சு(பிரிவு -4) நிலை-1 ப.சதிஸ்குமார்(பட்டிருப்பு ம.வி), நிலை-2 சி.ஜினிதரன் (முதலைக்குடா ம.வி), நிலை-3 ந.விஜயப்பிரியா(பெரிய போரதீவு பா.வித்), பேச்சு(பிரிவு -5) நிலை-1 க.சுரேஸ்குமார்(பெரிய கல்லாறு ம.க.வி), நிலை-2 பூ.புனிதவதி (முதலைக்குடா ம.வி), நிலை-3 த.தயாழினி (மண்டூர் ம.வி)

பாவோதல்(பிரிவு -1) நிலை-1வே.துஸ்யந்தி(தேற்றாத்தீவு ம.வி), நிலை-2 வி.மனோமாஜினி(திருப்பழுகாமம் வி.வித்), நிலை-3 க.நிறோஜினி(முனைக்காடு வி.வித்), பாவோதல் (பிரிவு -2) நிலை-1அ.சுதாகரன்(களுதாவளை ம.வி), நிலை-2 பே.சுகிர்தா (அம்பிளாந்துறை க.ம.வி), நிலை-3 பூ.சந்திரகலா(மண்டூர் ம.வி), பாவோதல் (பிரிவு -3) நிலை-1 ரு.பிரியந்தன்(முனைத்தீவு ச.ம.வி) நிலை-2 சு.கோபிதா (களுவாஞ்சிகுடி வி.வித்), நிலை-3 ச.மாலினி (முனைக்காடு வி.வித்தி)நிலை-1 பாவோதல் பிரிவு-4 சு.சுயநிதா(கோட்டைக்கல்லாறு ம.வி), நிலை-2 த.ரதனி(மண்டூர் ம.வி), நிலை-3 சி.சுபாஜினி(கடுக்காமுனை வா.வித்), பாவோதல் (பிரிவு -5) நிலை-1 தி.ஜனனி(குருக்கள் மடம் ம.வி) நிலை-2 பூ.காந்திமலர் (முனைத்தீவு ச.ம.வி)

இசையும் அசைவும் (பிரிவு-1) நிலை-1 ச.நர்த்தனா (களுதாவளை ம.வி), நிலை-2 ஜெ.நித்திய நர்த்தனா (திருப்பழுகாமம் வி.வித்), இசை (தனி)(பிரிவு-2) பு.வாசுதாஸ்(துறைநீலாவணை ம.வி), நிலை-2 யோ.டில்ரூபன் (பழுகாமம் கண்டுமணி ம.வி), நிலை-3 கோ.விஜிதா (கடுக்காமுனை வா.வித்) இசை(தனி) (பிரிவு-3) க.சசிகலா (பழுகாமம் க.ம.வி), நிலை-2 செ.செந்துரன் (களுதாவளை ம.வி) நிலை-3 க.ஜெயரூபா(முதலைக்குடா ம.வி) இசை(தனி) (பிரிவு-4) நிலை-1 பா.கிருஷ்ணவேணி(தேற்றாத்தீவு ம.வி), நிலை-2 வி.டிலோஜினி (பழுகாமம் க.ம.வி), நிலை-3 சி.கேமாசினி(கடுக்காமுனை வா.வி) இசை(தனி) (பிரிவு-5) நிலை-1 வி.கவிதா(பட்டிருப்பு ம.ம.வி)

இசை(குழு) (தி.போ) நிலை-1 பழுகாமம் க.ம.வி, நிலை-2 அம்பிளாந்துறை க.ம.வி., நிலை-3 பெரியகல்லாறு ம.க, நடனம் (தனி) (பிரிவு-1) நிலை-1 ம.கேமாஜினி(களுதாவளை ம.வி), நிலை-2 ச.சத்யா(தம்பலவத்தை க.வித்), நடனம் (தனி) (பிரிவு-2) நிலை-1 ச மஞ்சிபாசினி(செட்டிப்பாளையம் ம.வி), நடனம்(தனி) (பிரிவு-3) நிலை-1 கு.ஹேமசாலினி (செட்டிப்பாளையம் ம.வி), நடனம்(தனி) (பிரிவு-4) நிலை-1 ஆ.கிருஷாந்தினி (பெரியகல்லாறு ம.க), நடனம (தனி) (பிரிவு-5),ர.ஜெசிந்தா (களுதாவளை ம.வி), நடனம் (குழு) (தி.போ), நிலை-1 அரசடித்தீவு வி.வித், நிலை-2 பெரியகல்லாறு ம.க., நாடகம் (தி.போ), நிலை-1 குருக்கள் மடம் க.ம.வி, நிலை-2 கோவில் போரதீவு வி.ம.வி, நிலை-3 அம்பிளாந்துறை க.ம.வி, வில்லுப்பாட்டு(தி.போ), நிலை-1 கடுக்காமுனை வா.வி, நிலை-2 மகிழூர் ச.ம.வி, நிலை-3 தும்பங்கேணி க.வித், விவாதம் (தி.போ), நிலை-1 பட்டிருப்பு ம.ம.வி, தமிழ் அறிவு வினாவிடை(தி.போ) நிலை 1 மண்டூர் ம.வி, நிலை-2 துறைநீலாவணை ம.வி, நாட்டுக் கூத்து(தென்மோடி) நிலை 1 மகிழடித்தீவு ச.வித், நாட்டுக் கூத்து(வடமோடி) நிலை-1 தும்பங்கேணி க.வித்.

## 100 ஆண்டு பழமை வாய்ந்த பாலம்தான்

# பல உயிரைப்பலி எடுத்த ரயில் விபத்துக்கு காரணம்

கடலுண்டி ஆற்றில் இடிந்து விழுந்த பாலம் கட்டப் பட்டு நூறுஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதாக கூறப்படுகிறது. கர்நாடக மாநிலம் மங்களூரில் இருந்து ஒரு எக்ஸ்பிரஸ் ரயில் நேற்று முன்தினம் சென்னை நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தது. இந்த ரயில் கேரள மாநிலம் கோழிக்கோடு வழியாக சென்னை செல்கிறது. கோழிக்கோடு அருகே கடலுண்டி என்னும் ஆறு ஓடுகிறது. கேரளாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் பருவமழையால் இந்த ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

மங்களூர் - சென்னை எக்ஸ்பிரஸ் ரயில் நேற்று முன்தினம் மாலை கடலுண்டி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தின் மீது சென்று கொண்டிருந்தது. அப்போது பலத்த மழை பெய்து கொண்டிருந்தது.

இதனால் ரயிலின் கடைசி 4 பெட்டிகள் தடம் புரண்டு கடலுண்டி ஆற்றில் கவிழ்ந்தன. இதில் பலியானவர்களின் எண்ணிக்கை 57 ஆக உயர்ந்துள்ளது. 300 பேர் காயம் அடைந்தனர்.

கடலுண்டி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் கட்டப்பட்டது ஆகும். கடலுண்டி ஆறும், அரபிக் கடலும் ஒன்று சேரும் இடத்தில் தான் இந்தப் பாலம் கட்டப்பட்டுள்ளது. இரும்பு கேர்டர்களால் இந்தப்பாலம் கட்டப்பட்டுள்ளது. பாலத்தின் இரண்டு புறங்களிலும் இரும்பு தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த பாலம் கட்டப்பட்டு நூறு ஆண்டுகளைக் கடந்து விட்டதாக கூறப்படுகிறது.

இந்த பழமையான பாலத்தின் அருகே ஒரு புதிய பாலம் கட்டப்பட்டு வருகிறது. இந்த பாலத்தின் கட்டுமான பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது.

பழைய பாலத்தில் ரயில் செல்லும் போது பாலத்தின் தூண்களில் ஒன்று வெள்ளத்தில் மூழ்கி அடித்துச் செல்லப்பட்டது.



இதனால் தான் நூறு ஆண்டுகளைக் கடந்த பாலம் இடிந்து ஆற்றில் விழுந்தது. அதன் மேலே சென்ற ரயிலும் ஆற்றில் கவிழ்ந்தது.

### தொழிலாளர்களால் உயிர் பிழைத்த ரயில் பயணி

நேற்று முன்தினம் நடந்த கொடூர ரயில் விபத்து நடந்த கடலுண்டி பாலம் ஆங்கிலேயர்கள் காலத்தில் கட்டப்பட்ட மிகவும் பழமையான பாலமாகும். எனவே இந்த பாலம் ரயில் போக்குவரத்து வசதிக்கு ஏற்றதாக இருக்காது என்பதால் அதன் அருகிலேயே மீண்டும் ஒரு புது ரயில்வே பாலம் கட்டப்பட்டு வருகிறது. விபத்து நடந்தபொழுது புது ரயில்வே பாலத்தில் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். திடீரென்று ஆற்றிற்குள் ரயில் கவிழ்ந்ததால் செய்வதறியாது திகைத்த தொழிலாளர்கள் அருகிலிருந்தவர்களையும் உதவிக்கு அழைத்துக்கொண்டு புதுப்பாலப் பணிக்காக அங்கிருந்த கேஸ் கட்டர் மற்றும் நவீன கருவிகளால் உடனடியாக மீட்பு வேலையில் இறங்கினர். யாருடைய உத்தரவையும் எதிர்பார்க்காமல் இந்த தொழிலாளர்கள் மீட்புப்பணியில் இறங்கியதால் ஆற்றிற்குள் கவிழ்ந்த ரயில் பெட்டியிலிருந்து மெல்ல மெல்ல மூழ்கிக் கொண்டிருந்த பலரின் உயிர் பிழைத்தது.

மீட்கப்பட்டவர்கள் உயிர் பிழைத்த அதிசயத்தைவிட இந்த தொழிலாளர்கள் தக்க நேரத்தில் செய்த உதவியை எண்ணி கையெடுத்து கும்பிட்டு நன்றி தெரிவித்தனர்.

உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

### விடாத மழையிலும் தொடர்கிறது மீட்புப்பணி

கேரள மாநிலத்தில் பல மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக பருவ மழை விடாது பெய்து வருகிறது. இதில் பல வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இந்த மழைக்கு இது வரை சுமார் 20 பேர் பலியாகியுள்ளனர். நேற்று முன்தினம் ரயில் விபத்து நடந்தபொழுதும் கடும் சூறாவளியுடன் கூடிய பலத்த மழை பெய்துகொண்டிருந்தது. ரயில் விபத்து மீட்பு பணி இந்த கடும் மழையையும் பொருட்படுத்தாமல் முழுவீச்சில் நடந்தது. இந்த விபத்து பற்றி தகவல் அறிந்ததும் கேரள முதல்வர் ஏ.கே.அந்தோணி ஒரு சிறப்பு மருத்துவகுழுவையும், மீட்பு குழுவையும் தேவையான நவீன கருவிகளுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து செல்ல உத்தரவிட்டார். கடும் மழையிலும் ரயில் பெட்டிகளை அப்புறப்படுத்துதல், இறந்தவர்களின் உடல்களை எடுத்துச்செல்லுதல், காயம் அடைந்தவர்களை உடனடியாக மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லுதல், உருக்குலைந்த ரயில் பெட்டிகளில் சிக்கியுள்ள பயணிகளை மீட்டல், பயணிகளின் உடைமகளை பத்திரப்படுத்தல் ஆகிய பணிகள் நடக்கின்றன. இதில் ரயில்வே சிறப்பு பாதுகாப்பு படையினர், போலீசார், தன்னார்வ தொண்டு நிறுவன ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கேரள தொழில் அமைச்சர் குஞ்சாலிகுட்டி, பொதுப்பணி துறை அமைச்சர் முனீர, கேரள மாநில தலைமை செயலாளர் பி.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நேற்று முன்தினம் இரவு முழுவதும் விபத்து நடந்த இடத்திலும், கோழிக்கோடு அரசு மருத்துவமனையிலிருந்தும் மீட்புப் பணிகளையும், நிவாரண பணிகளையும் துரிதப்படுத்தி வருகின்றனர்.

## மணிப்பூர் நிலவரம் குறித்து பேச்சு நடத்த அத்வானி அழைப்பு

# அரசியல் தலைவர்கள் புறக்கணிப்பு

(இம்பால்)

மணிப்பூர் நிலைமை குறித்து பேச்சு வார்த்தை நடத்த டெல்லி வருமாறு அத்வானி விடுத்த அழைப்பை புறக்கணிக்க மூத்த அரசியல் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர். அத்வானி ராஜினாமா செய்ய வேண்டுமென காங்கிரசார் கோரிக்கை வைத்துள்ளனர்.

மணிப்பூர் நிலைமை குறித்து விவாதிக்க அரசியல் தலைவர்கள் டெல்லிவருமாறு உள்துறை அமைச்சர் அத்வானி அழைப்பு விடுத்து இருந்தார். அத்வானி விடுத்த இந்த அழைப்பை மணிப்பூர் அரசியல் தலைவர்கள் புறகணித்து விட்டனர்.

முன்னாள் முதல்வர் நிபமாசா சிங் மணிப்பூர் பெடரல் கட்சியின் தலைவரும் காட்டுலாகா அமைச்சருமான காங்குமே காமே , தேசியவாத காங்கிரஸ் தலைவர் முன்னாள் சங்கோகே டௌங்கள் ஆகிய மூத்த தலைவர்கள் தற்போதுள்ள சூழ்நிலையில் பிரதமரோ அல்லது உள்துறை அமைச்சரோ இம்பால் வந்து பிரச்சினை பற்றி விவாதிக்க வேண்டுமென கூறியுள்ளனர்.



மணிப்பூர் மாணவர் சங்க தலைவர்கள் 12 பேரை கைது செய்ததைத் தொடர்ந்து அத்வானி ராஜினாமா செய்ய வேண்டுமென மணிப்பூர் பிரிவு காங்கிரஸ் வற்புறுத்தியுள்ளது. மாணவர் சங்க தலைவர் ஒயிநாம் ஷியாம் சந்த், செயலாளர் சங்சாத் கோங்சாத் ஆகியோர் கைது செய்யப்பவட்டர்களில் அடங்குவர். மாணவர்கள் கைது செய்யப்பட்டதை பல அமைப்புகளும் கண்டித்துள்ளன. அவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டுமென கோரி பலர் உண்ணாவிரதப் போராட்டங்களும் நடத்தினர்.

இதற்கிடையில் இம்பால் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் தொடர்ந்து பதட்டம் நிலவுவதால் மீண்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. முன்னதாக நேற்று காலை 11 மணியிலிருந்து 6 மணி நேரம் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தது. கோவிந்தாஜி கோயில் பகுதியில் ரதயாத்திரை நடப்பதையொட்டி அங்கு மேலும் நான்கு மணி நேரம் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப் பட்டது.

## ஆக்ராவில் ஒருநாள் பேச்சு பிறந்த வீட்டிற்கும் செல்கிறார் அதிபர் முஷாரப்

(இஸ்லாமாபாத்)

அதிபர் முஷாரப்பின் இந்திய சுற்றுப்பயண திட்ட விபரம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாகிஸ்தான் அதிபர் பெர்வேஷ் முஷாரப் 3 நாட்கள் பயணமாக அடுத்தமாதம் இந்தியா செல்கிறார். இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் காஷ்மீர் பிரச்சினை குறித்து அவர் இந்திய தலைவர்களுடன் விரிவாக பேச்சு நடத்துகிறார்.

அதிபர் முஷாரப்பின் இந்திய பயணத்திட்டம் நேற்று முறைப்படி வெளியிடப்பட்டது. 3 நாள் இந்தியாவில் தங்கும். முஷாரப் தனது 14-ம் தேதி பயணத்தை துவக்குகிறார்.

மனைவியுடன் ஜூலை 14-ம் தேதி காலை புதுடெல்லி செல்லும் முஷாரப்பிற்கு சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்படுகிறது. வரவேற்பு முடிந்தவுடன் ராஷ்டிரபதி மாளிகையில் தங்குகிறார். முஷாரப் அங்கு ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன், பிரதமர் வாஜ்பாய், எதிர்கட்சி தலைவர் சோனியா, உள்துறை அமைச்சர் அத்வானி மற்றும் தலைவர்களை மரியாதை நிமித்தும் சந்தித்து பேச்சு நடத்துகிறார்.

பின்னர் தேசப்பிதா மகாத்மா காந்தியின் நினைவிடத்திற்கு சென்று அஞ்சலி செய்கிறார். தொடர்ந்து தான் பிறந்த வீட்டிற்கு சென்று மழலை நினைவுகளை பகிர்ந்து கொள்கிறார். பிறகு டெல்லியில் இருக்கும் பாகிஸ்தான் தூதர் அஷ்ரப் ஜஹாங்கிற்காசி அளிக்கும் தேநீர் விருந்தில் கலந்து கொள்கிறார்.

பின்னர் சிறிது நேர ஓய்விற்கு பிறகு ஜனாதிபதி நாராயணன் முஷாரப்பை கௌரவிக்கும் வகையில் அளிக்கும் இரவு விருந்தில் பங்கேற்பதோடு அதிபரின் அன்றைய நிகழ்ச்சிகள் முடிவு பெறுகின்றன.

மறுநாள் 15-ம் தேதி காலை உயர் மட்ட பேச்சுக்காக ஆக்ரா செல்கிறார். அங்கு நாள் முழுவதும் இந்திய பிரதமரோடு பேச்சு நடத்துகிறார். தேவை ஏற்பட்டால் மறுநாள் காலையும் பேச்சு தொடரும்.

அதற்கடுத்த மறுநாள் 16-ம் தேதி ஜெய்பூருக்கு விமானத்தில் செல்லும் முஷாரப் அங்கிருந்து ஹெலிகாப்டரில் புகழ் பெற்ற ஆஜ்மிர் தர்காவுக்கு செல்கிறார். அங்கு வழிபாடுகள் முடிந்தவுடன் ஜெய்ப்பூருக்கு திரும்பி அங்கிருந்து இஸ்லாமாபாத்திற்கு திரும்புகிறார்.

அதிபர் இரண்டு நாட்கள் இருக்கும் படிதான் பயணத் திட்டம் இருந்தது. ஆனால் பேச்சு வார்த்தை பலனளிக்க இன்னும் கூடுதலாக ஒருநாள் இருந்தால் பயனுள்ளதாக இருக்கும் என்று பாக். தலைவர்கள் விரும்பியதின் பேரில் சுற்றுப்பயணம் மேலும் ஒருநாள் நீட்டிக்கப்பட்டதாக பாக். வட்டாரங்கள் தெரிவித்தன.

# நாம் கற்பிக்கும் விடயம் தொடர்பான ஆய்வை முன்னரே செய்திருக்க வேண்டும்''

## 'கூர்மை வெளியீட்டு விழாவில் உரை'

(கல்லாறு நிருபர்)

'கூர்மை' வெளியீடு மூன்று விடயங்களை வெளிப்படுத்துகின்றது. எமது துறை வளர்ச்சி, பீடத்தின் வளர்ச்சி, இவற்றின் மூலம் கிழக்கு பல்கலைக்கழக வளர்ச்சி என்பனவே அவையாகும்.

வடக்கு கிழக்கு மாகாண ஆசிரியர்கள் திருகோணமலையில் கலந்து கொண்ட கருத்தரங்கில், பொருளாதார நடைமுறை விடயங்களை தமிழில் முன்னெடுத்துச் செல்ல செய்தி ஏடு ஒன்று உருவாக வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள். அந்த கோரிக்கையின் விளைவாக உதயமானதே கூர்மை. காலத்தின் தேவை கருதியும், உயர்வகுப்பு மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரின் தேவை கருதியும் 'கூர்மை' வெளியாகிக் கொண்டிருக்கின்றது.

அத்துடன் தமிழில் வெளிவரும் ஒரேயொரு பொருளியல் செய்தியேடு என்பதால் கூர்மைக்கு பெருமை. மேற்கண்டவாறு கிழக்குப்பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவர் கே.தம்பையா கூர்மை வெளியீட்டு விழாவில் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

கிழக்கு பல்கலைக்கழக நூலக வாரத்தை முன்னிட்டு 'கூர்மை' 10வது சிறப்பிதழை வெளியிடும் வைபவத்தில் வரவேற்புரை நிகழ்த்திய ஏ.சௌந்தரலிங்கம், க.பொ.த உயர்தர வினாத்தாள்களை திருத்தும் போது மாணவர்களுக்கு பொருளியல் பாடம் ஒரு கஷ்டமான பாடமாக இருப்பதை உணரக்கூடியதாக இருந்தது.

அத்துடன் பொருளியல் பாடத்தை தவிர்த்து ஏனைய பாடங்களை மாணவர்கள் தேர்வு செய்வதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

இவற்றிற்கு காரணம் தமிழில் பொருளியல் புத்தகங்கள் போதியளவு இல்லை. அந்த குறைபாட்டை 'கூர்மை' நிவர்த்தி செய்கின்றது என்று அவர் தனது வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

வணிக முகாமைத்துவ பீட கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட கொழும்பு பல்கலைக் கழக பேராசிரியர். எஸ்.சந்திரசேகரம் தமதுரையில்:-

இந்த மாகாண மக்களின் சமுதாயத்தின் கடந்த கால நடவடிக்கைகளை நடந்து வந்த பாதையை ஆய்வு செய்வதன் மூலம் புதிய சிந்தனைகள் பலவற்றை உருவாக்க முடியும்.

நாம் எதை கற்பிக்கின்றோமோ அதைப்பற்றிய ஆய்வை நாம் முற்கூட்டியே செய்திருக்க வேண்டும். இந்த நடைமுறையையே எமது பல்கலைக்கழகங்கள் 19ம் நூற்றாண்டில் இருந்து பின்பற்றுகின்றன. இது பல்கலைக்கழக ஜேர்மன் மரபிலிருந்தே பின்பற்றப்படுகின்றது. இது விரிவுரையாளர்கள் ஆய்வாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும் உருவாக வேண்டும் என்பதையே உணர்த்துகின்றது.

எனவே ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், ஆவணப்படுத்துவதற்கும் 'கூர்மை' தொடர்ந்து வெளிவர வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பிரதம அதிதி பீடாதிபதி மூக்கையாவிடமிருந்து 'கூர்மை' முதற் பிரதியைச் சிறப்பு அதிதி சந்திரசேகரர் பெற்றுக் கொண்டார்.

பிரதம அதிதி உபவேந்தர் பேராசிரியர் எம்.எஸ்.மூக்கையா பிரதம விருந்தினர் உரையின் போது.

90ம் ஆண்டில் கற்பித்ததை இந்த ஆண்டு கற்பிக்க முடியாது. எழுதுவதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை கிரகிப்பினுடைய உத்தரவாதமே சிந்தனை. கற்பிப்பதற்குத் தெளிவு அவசியம்.

காலத்திற்கு பொருத்தமான கல்வியே இன்றைய தேவை. அவ்வாறில்லாத கல்வி, இல்லாத கல்விக்குச் சமம். அறிவின் அளவும் மட்டமும் எப்போதும் ஒரே நிலையில் இருக்காது. சமூக பௌதிக வேகமான மாற்றங்களுக்கு ஏற்ப எமது அறிவும் விருத்தியாக வேண்டும். அதற்கு 'கூர்மை' போல் பல செய்தியேடுகள் வெளிவரவேண்டும் என்று குறிப்பிட்டார்.

# மட்டக்களப்பு மாவட்ட மட்ட தமிழ் மொழித்தினப் போட்டி – 2001

(க.ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பு மாவட்ட மட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகள் கடந்த 22ஆந் திகதிகளில் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

1ம் நாள் நிகழ்வுகள்(22-06-2001) தமிழ் மொழி உதவிக் கல்விப்பணிப்பாளர் செல்வி. சு.புஸ்பராணி தலைமையில் நடைபெற்றது.

கல்குடா வலயக்கல்விப் பணிப்பாளர் அ.குணராஜரெட்ணத்தின் சிறப்புரையினைத் தொடர்ந்து அதிதிகளாகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் தி.பொன்னம்பலம், பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் கே.இராசநாயகம் ஆகியோர் உரையாற்றினர்.

மட்டக்களப்பு,கல்குடா, பட்டிருப்பு வலயங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர். பேச்சு, நடனம்(தனி,குழு) ஆகிய போட்டிகள் நடைபெற்றன.முதல் நாள் நிகழ்வின் முடிவுகளின் படி முறையே மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா ஆகிய வலயங்கள் 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

2ம் நாள்(23-06-2001) நிகழ்வுகளை வலயக் கல்விப் பணிப்பாளர்களான அ.குணராஜரெட்ணம், தி.பொன்னம்பலம், கே.இராசநாயகம், நடுவர்கள் சார்பில் முகைதீன் ஆகியோர் மங்கள விளக்கினை ஏற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தனர். தொடர்ந்து தமிழ் மொழிக்குப் பொறுப்பான உதவிக்கல்விப்பணிப்பாளர் தங்கத்துரை தொடக்கவுரையை நிகழ்த்தினர்.

பின்னர் இசையும் அசைவும், நடனம்(தனி, குழு), பேச்சு, வில்லுப்பாட்டு, பா ஓதல், வாசிப்பு, இசை நாடகம், போன்ற போட்டிகள் நடைபெற்றன.

3வலயங்களுக்கிடையில் நடை பெற்ற போட்டிகளும் வெற்றியீட்டிய பாடசாலை, மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

| பெயர் | பாடசாலை | நிகழ்ச்சி | பிரிவு | இடம் |
|---|---|---|---|---|
| 1. பு.ஆன் சப்தியா | மட்/ புனித சிசிலியா பெண்கள் பாடசாலை | இசையும், அசைவும் | 1 | 1 |
| 2. க.கோவர்த்தனி | மட்/ புனித சிசிலியா பெண்கள் பாடசாலை | நடனம் (தனி) | 1 | 1 |
| 3. க.சதுவர்தனன் | மட்/ புனித மிக்கேல் கல்லூரி | பேச்சு | 4 | 1 |
| 4. ர.மதுமதி | மட்/ புனித சிசிலியா பெண்கள் பாடசாலை | நடனம் | 2 | 1 |
| 5. க.தனஞ்சயன் | மட்/ புனித மிக்கேல் கல்லூரி | இசை (தனி) | 2 | 1 |
| 6. வ.டுஜித்ரா | மட்/ புனித சிசிலியா பெண்கள் பாடசாலை | நடனம் (தனி) | 4 | 1 |
| 7. 7பேர் கொண்ட குழு | மட்/ புனித மிக்கேல் கல்லூரி | வில்லுப்பாட்டு | திறந்த போட்டி | 1ம் இடம் |
| 8. தி.சரண்யா | மட்/ வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை | நடனம் (தனி) | 3 | 1 |
| 9. ச.ரகுப்பிரியா | மட்/ வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை | நடனம் (தனி) | 5 | 1 |
| 10. ப.கே.சிந்தியா | மட்/ புனித சிசிலியா பெண்கள் பாடசாலை | இசை (தனி) | 4 | 1 |
| 11. மு.அ.க.ந.சித்தாரா | மட்/ மீராபாளிகா மகா வித்தியாலயம் | பேச்சு (தனி) | 2 | 1 |
| 12. பு.ஜெயதீபா | மட்/ செங்கலடி மத்திய கல்லூரி | பேச்சு (தனி) | 5 | 1 |
| 13. யோ.சதுர்த்திகா | மட்/ கோட்டைமுனை கனிஸ்ட வித்தியாலயம் | பேச்சு | 1 | 1 |
| 14. ற.இஸ்ஸதுன்னிஷா | மட்/ மீரா பாளிகா மகா வித்தியாலயம் | பேச்சு | 3 | 1 |
| 15. சு.சுதர்ஷினி | மட்/ செங்கலடி மகா வித்தியாலயம் | இசை (தனி) | 5 | 1 |
| 16. மு.க.பாத்திமா பாஹிறா | மட்/ ஹில்றியா வித்தியாலயம் | பா ஓதல் | 1 | 1 |
| 17. க.சரண்யா | மட்/ செங்கலடி மத்திய கல்லூரி | பா ஓதல் | 3 | 1 |
| 18. த.கோஷிகா | மட்/ விவேகானந்தா மகளிர் பாடசாலை | பா ஓதல் | 2 | 1 |
| 19. கு.இக்ஷணா | மட்/ ஆரையம்பதி இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை | வாசிப்பு | 1 | 1 |
| 20. சி.ஷங்சீர்ணா | மட்/ வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை | வாசிப்பு | 2 | 1 |
| 21. குழு நிகழ்ச்சி | மட்/ காங்கேயன் ஓடை அல்-அக்ஷா வித்தியாலயம் | இசை நாடகம் (திறந்தபோட்டி) | | |
| 22. சு.சுயநிதா | மட்/ கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயம் | பா ஓதல் | 4 | 1 |
| 23. இ.ஜாமினி | மட்/ புனித சிசிலியா பெண்கள் பாடசாலை | பா ஓதல் | 5 | 1 |
| 24. குழு நிகழ்ச்சி | மட்/ புனித மிக்கேல் கல்லூரி | விவாதப் போட்டி (திறந்த போட்டி) | | 1 |

| | | | |
|---|---|---|---|
| 1. நாட்டுக்கூத்து (தென்மோடி) | மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம் | திறந்த போட்டி | 1ம் இடம் |
| நாட்டுக்கூத்து (தென்மோடி) | மட/ பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலயம் | திறந்த போட்டி | 2ம் இடம் |
| 2. நாட்டுக்கூத்து (வடமோடி) | மட/ செங்கலடி மத்திய மகா வித்தியாலயம் | திறந்த போட்டி | 1ம் இடம் |
| நாட்டுக்கூத்து (வடமோடி | மட/ விவேகானந்தா பெண்கள் ம.வி | திறந்த போட்டி | 2ம் இடம் |
| 3. விசேட கூத்து | மட/ செங்கலடி மகா வித்தியாலயம் | திறந்த போட்டி | 1ம் இடம் |
| விசேட கூத்து | மட/ பாவற்கொடிச் சேனை ம.வி | திறந்த போட்டி | 2ம் இடம் |

**நாடகப் போட்டிக்கான முடிவுகள் இதுவரை அறிவிக்கப்படவில்லை. போட்டியில் 1ம் இடத்தைப் பெற்ற பாடசாலைகள் மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.**

# சாரணர் வேலை வாரத்தில் சிரமதானம்

(நமது நிருபர்)

சாரணர்களுக்கான வேலை வாரத்தினை முன்னிட்டு மட்/மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை குருளைச் சாரணர்கள் சுமார் 130 பேர் தங்களது ஆரம்பப் பிரிவு பாடசாலையினை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். இதன் மூலம் 2500 ரூபா மீதப்படுத்தப்பட்டுள்ளது என ஆரம்பப் பிரிவு பாடசாலை அதிபர் கனகசிங்கம் தெரிவித்தார்.

மேலும் இவ் சிரமதான பணியினை அப்பாடசாலையின் ஆசிரியரும், குருளைச்சாரண தலைவியுமாகிய திருமதி. கெபிரியல் பாடசாலையின் குருளைச் சாரணர் தலைவர் ஏ.டீ.ஆர். லூயிஸ் ஆகியோர் நெறிப்படுத்தினர்.

மாவட்டசாரண ஆணையாளர் ஜே.எஸ்.பிள்ளை இவ் சிரமதான பணியினை நேரில் பார்வையிட்டு சிரமதான பணியில் ஈடுபட்டிருந்த குருளைகளுக்கு தனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

## அன்னை

பெண்மை என்ற படைப்புக்கு
பெருமை சேர்த்துத் தாய்மை
என்ற தன்னிகரற்ற
சுடர்தனை தரணிதனில்
ஏற்றி வைத்த நற்தீபம்

இறைவன் படைத்திட்ட
உயிருக்கு உடல் கொடுத்து
உலகிற்கு அறிமுகம் தனை
செய்து வைத்துப் பூரித்த
உன்னத சக்தி

மாதங்கள் பல மடியினில்
எம்மை தாங்கித் தன்
உதிரத்தைப் பாலாக
ஊட்டி உடல் வளர்த்த
உத்தமி

துன்பம் வருகையில் எமை
தாங்கி சோகம் கொள்கையில்
நமைத் தேற்றி- என்றும் நல்
உள்ளத்திற்கு உரமிட்ட
உயர் பிறவி

எழுதியவர்
ஜே.அச்சுதா
களுவாஞ்சிகுடி

## நான் விரும்பும் பெரியார்

நான் விரும்பும் பெரியார் ஜவகர்லால் நேரு ஆகும். இவர் சுதந்திர இந்தியாவின் முதலாது பிரதமர் ஆவார். இவர் மத்திய இந்தியாவின் "அகல பாத்" என்ற இடத்தில் 1889ம் ஆண்டு பிறந்தார். அவருடைய தந்தையார் பெயர் "மோதிலால் நேரு" என்பதாகும். நேரு அவர்களுக்குப் பதினொரு வயதாக இருக்கும் பொழுது இவருடைய பெற்றோர் அவருக்குக் 'கல்வி புகட்டுவதற்காக "ஜரிஷ்" இனத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரை நியமித்தனர். இதன் பயனாக நேரு அவர்கள் பல நூல்களைக் கற்றுக் கொண்டார். இவர் தமது உயர் கல்வியைக் கற்பதற்காக 1908ம் ஆண்டு இங்கிலாந்து "கேம்பிரிஜ்" பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்பட்டு சட்டத் துறையில் பட்டம் பெற்றார். பின்பு 1912ம் ஆண்டு இநதியா திரும்பினார். அவர் ஒரு பிரபல்யமான சட்டத்தரணியாக இருந்தாலும் அத்தொழிலை தொடர்ந்து செய்யாமல் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். போராட்டம் காரணமாக அடிக்கடி சிறை வாசம் சென்று வந்தார். இந்திய சுதந்திரப் போராட்டத்துக்காக 20 ஆண்டுகள் பணியாற்றி 1947 தொடக்கம் 1964 வரை பிரதமராக கடமையாற்றினார். இறுதியாக இவர் 1964ம் ஆண்டு இறந்தார்.

தே.மதன்ராஜ்
தரம் - 8
மட்/மெ.ம.கல்லூரி

### விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்

1.தொலைநோக்கியைக் கண்டு பிடித்தவர்?
கலிலியோ கலிலி
2.மின்னேற்றத்தைக் கண்டு பிடித்தவர்?
தெலேஸ் / மிலேடனின் தெலேஸ்
...தயிலையில் உள்ள நஞ்சு ...ன?
...னின்
4.முதன் முதலில் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட விண்கலத்தின் பெயர்?
சல்யூட்-01

க.கலீபன்
தரம்-8
மட்/மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலயம்
களுவாஞ்சிகுடி

# பறக்கும் வெள்ளை யானை

பஞ்சநாதன் என்ற பஞ்சுவுக்கு புத்திசாலித்தனம் போதாது. ஆனால் மிகவும் நல்லவன். சூதுவாது கிடையாது. நல்ல உழைப்பாளி. அவனிடம் பரம்பரைச் சொத்தாக ஒரு காணி நிலம் இருந்தது. அதை நன்கு உழுது எருப்போட்டு தினை விதைத்திருந்தான் பஞ்சு. ஆற்றங்கரை என்றபடியினால் பயிர் அமோகமாக விளைந்தது. தேவலோகத்தில் இருந்து பறந்து வந்த வெள்ளை யானை தினையின் மணம் கண்டு வயிறார மேய்ந்தது. தூரத்திலிருந்து இதைப் பார்த்த பஞ்சு அதை விரட்ட ஓடி வந்தான்.யானை பறந்தது. பஞ்சுவின் கையில் அகப்பட்டது யானையின் வால் தான். யானையோடு பஞ்சுவும் பறந்தான். தேவலோகத்தில் போய் யானை நின்றது. பஞ்சுவும் வாலை விட்டான். அங்கிருந்த தேவர்கள் "அடே மானிடனே! உடலோடு இங்கு எப்படி வந்தாய்? உனக்கு என்ன வேண்டும்? என்று விசாரித்தனர்."நான் உங்கள் தலைவனைப் பார்த்து நியாயம் கேட்க வேண்டும். என்னை அங்கு அழைத்துச் செல்லுங்கள்" என்றான் பஞ்சு. தேவர்கள் பஞ்சுவை இந்திரனிடம் அழைத்துச் சென்றனர். "யார் நீ? உனக்கு என்ன வேண்டும்? என்று கேட்டான் தேவேந்திரன். "உங்களுடைய வெள்ளை யானை என்னுடைய காணி நிலத்தில் பயிரிட்டிருந்த தினையை மேய்ந்து விட்டது. அதன் வால் தான் அகப்பட்டது. அதைப்பிடித்துக் கொண்டு தான் இங்கே வந்தேன். என் பெயர் பஞ்சு. ஏழை விவசாயி. வருடம் பூராவும் நான் சாப்பிடுவதற்கு என்ன பண்ணுவேன்? என்று அழுதான். அழுகையுடன் "யானை வளர்க்கணும் என்று ஆசைப்பட்டா தீனிச் செலவு ஆகத் தான் செய்யும் அதுக்காக பூலோகம் அனுப்பிடுதறா? நீங்கள் ஜம்முனு யானை சவாரி செய்ய நானா தீனி போட முடியும். நஷ்ட ஈடு வாங்காம நகர மாட்டேன். என்று தரையில் உட்கார்ந்து கொண்டான். இந்திரனும் பஞ்சு கள்ளங் கபடமற்றவன் என்பதைப் புரிந்து கொண்டான். "இவனுக்கு ஒரு மரைக்கால் பொற்காசுக்கள் கொடுத்து பூலோகத்தில் விட்டு வாருங்கள்" என்று உத்தரவிட்டான். தங்க மூட்டையோடு வீட்டிற்கு வந்தான் பஞ்சு. பஞ்சுவிற்குத் தங்கத்தின் மதிப்புத் தெரியவில்லை. ஒரு வராகனை எடுத்துக் தட்டான் தங்கராசுவிடம் போனான். தங்கராசு தங்கத்தை உரைந்து பார்த்ததும் அசந்து போ னான். 24 கரட் சொக்கத் தங்கம். "ஏது இது?" என்று கேட்டான். நடந்ததைக் கூறினான் பஞ்சு. பஞ்சுவின் அப்பாவித்தனத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான் தங்கராசு. "பஞ்சு எதிலயும் நல்லது கெட்டது உண்டு. நீ வீட்டிற்குப் போய் எல்லாவற்றையும் கொண்டு வா. நான் தங்க வராகனைப் பிரிச்சுத் தருகிறேன். என்றான். பஞ்சு தங்க மூட்டையைக் கொண்டு வந்தான். தங்கராசு அவனை ஒரு மரத்தடிக்கு கூட்டிச் சென்றான். கீழே செங்குத்தான பாறை. மரம் பாறையை ஒட்டி இருந்தது. பவுண் மூட்டையோடு மரத்தில் ஏறிய தங்கராசு "பஞ்சு நான் இங்கே இருந்து மூட்டையைக் கவிழ்க்கிறேன். பாறையில். விழுபவை தங்கக் காசுகள், பாறையில் இருந்து உருண்டு விழுபவை சாதாரண காசுகள். சாதாரண காசுகள் எனக்கு தரம் பிரித்துக் கொடுத்ததற்கான கூலி. சரிதானா? என்று கேட்டான்.

பஞ்சு சந்தோசமாய் சம்மதித்தான். தங்கராசு காசு மூட்டையைக் கவிழ்க்க காசுகள் நாலாபுறமும் உருண்டோடின. "பார்த்தியா! பாறை எப்படிக் கீழே தள்ளுகின்றது. அதை ஒருத்தர் கிட்டேயும் சொல்லாதே! பொறாமைப் படுவார்கள். என்ற படி கீழே இறங்கி வந்து மண்ணில் விழுந்த காசுகளைப் பொறுக்கி மூட்டை கட்டினான் தங்கராசு. கல்லின் மீது பத்துக் காசுகளே இருந்தன. அவற்றையும் தங்கராசுவிடமே கொடுத்துப் பணம் வாங்கிக் கொண்டு போனான் பஞ்சு.. தங்கராசு ஒரு நகைக்ககடை வைத்து செழிப்பாக வாழ்ந்தான். பஞ்சு அடுத்த வருடம் நிலத்தை உழுது மீண்டும் பயிரிட்டான். இம்முறை வெள்ளை யானை வந்தால் என்னைக் கூப்பிடு. நானும் உன்னோடு தேவலோகம் வருகிறேன். இந்திரன் உன்னை ஏமாற்றாமல் தங்க வராகனையே தரச் சொல்கிறேன். ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொள்வோம். நஷ்ட ஈட்டை அதிகமாகக் கேட்போம். என்றான் தங்கராசு . தினை முற்றியதும் பஞ்சுவுடன் காவல் இருந்தான் தங்கராசு. தங்கம் கிடைப்பதென்றால் சும்மாவா? வெள்ளை யானை வந்து மேய்ந்தது. சிறிது நேரத்தில் பறக்கத் தொடங்கியது. தங்கராசுவுக்கு வால் எட்டவில்லை.அதனால் பஞ்சுவின் கால்களைப்பிடித்துக் கொண்டான். மூவரும் வானிலே பறந்த காட்சியை அநேகர் பார்த்தனர். தங்கராசு மகிழ்ச்சியுடன் சொர்க்கத்திலே உனக்குத் தங்கம் அளந்த மரைக்கால் நாம் அரிசி அளக்கிறதை விடப் பெரிதா? என்று கேட்டான். "ஆமாம் என்றான் பஞ்சு. "எத்தனை பெரிசு?" என்று தங்கராசு கேட்க யானையின் வாலைப்பிடித்திருப்பதை மறந்து "இத்தனை என்று இரண்டு கைகளையும் அகல விரித்துக் காட்டினான் பஞ்சு. தங்கராசு விழுந்தது கரடுமுரடான நிலம். அதனால் தங்கராசுவுக்கு கை, கால் ஒடிந்தது. அவன் மேல் விழுந்ததால் பஞ்சுவுக்கு லேசான காயம் தான்.

ச.ரமணன்
தரம்-8B
மட்/மெதடிஸ்த கல்லூரி

### கண்டு பிடிப்புக்கள்

1.வானொலியைக் கண்டு பிடித்தவர் யார்?
மார்கோணி

2.எக்ஸ் கதிர்களைக் கண்டு பிடித்தவர் யார்?
கொன் ரெட் செரனஜே

3.ரேடியத்தைக் கண்டுபிடித்தவர் யர்ர்?
மேரி கியூரி அம்மை

4.கைக்கடிகாரத்தைக் கண்டு பிடித்தவர் யார்?
கிரேடம் ராம்சென்

5.மின்காந்தத்தைக் கண்டு பிடித்தவர் யார்?
ஸ்ரோச்சியன்

6.F வெப்பமானியைக் கண்டு பிடித்தவர் யார்?
பரனைட்

ம.புருஷோத்மன்
தரம்-8B
மெதடிஸ்த மத்திய கல்லூரி.




## நாட்டின் தேசிய விளையாட்டுக்கள்

| நாடுகள் | தேசிய விளையாட்டு |
|---|---|
| 1.அவுஸ்ரேலியா- | கிரிக்கட் |
| 2.இலங்கை- | எல்லே/ கிட்டிப்புள் |
| 3.பாகிஸ்தான்- | ஹொக்கி |
| 4.துருக்கி- | மல்யுத்தம் |
| 5.ஜப்பான்- | கராத்தே/ ஜுடோ |
| 6.ஸ்கொட்லாண்ட- | கால்பந்து |
| 7.கனடா- | பனிஹொக்கி |
| 8.இந்தியா- | ஹொக்கி. கபடி |
| 9.ஐக்கிய அமெரிக்கா- | பேஸ்பொல் |
| 10.ஸ்பெயின்- | ஜல்லிக்கட்டு |

ஜெகதீசணன்
தரம்-8K
மட்/ பட்டிருப்பு ம.ம.வி
களுவாஞ்சிகுடி

## மகாத்மா காந்தி

மகாத்மா காந்தி கி.பி 1869ம் ஆண்டில் கத்தியவர் பிரதேசத்தில் போர்ப்பந்தர் என்னும் இடத்தில் காபா காந்திக்கு மகனாகப் பிறந்தார். அவருக்கு மோகன்தாஸ் கரம் சாண்ட காந்தி எனப் பெயர் சூட்டப்பட்டது. பிற்காலத்தில் காந்திஜி, பாபுஜி என்ற பெயர்களால் கௌரவமாக அன்புடன் அழைக்கப்பட்டார். அவரிடம் நேர்மை ,சத்தியம் எளிமை, கருணை ஆகிய உயர் பண்புகள் காணப்பட்டன. 1948ம் ஆண்டில் கோட்சே என்ற இனவாதியின் துப்பாக்கிச் சூட்டினால் உயிர் இழந்தார்.

செ.யுவராசா
தரம் -8w
மட்/ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்

## ஒற்றுமை

ஒற்றுமை இல்லை ஓலங்கள் அதிகம்
வேற்றுமை எம்மிடம் வேதனை அதிகம்
ஒற்றுமை கண்டு ஒன்றாகி நிற்போம்
வேற்றுமை மறந்து வேதனை களைவோம்.

அவனியில் இன்று அவலங்கள் அதிகம்
அனைத்திற்கும் சார்ந்து அகதிகள் பெருக்கம்
இத்தனை அவலம் அவனியில் அகல
இனங்களின் ஓலம் இல்லாமற் போக
இப்புவியெங்கும் ஒற்றுமை வேண்டும்.

வி.கௌசீகன்
தரம் - 8"
மட்/ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்

## நிறம் தீட்டுங்கள்



இங்குள்ள படத்திற்கு சிறந்த முறையில் வர்ணம் தீட்டுங்கள் பார்ப்போம். சிறப்பாக வர்ணம் தீட்டுபவருக்கு 25 ரூபா காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முக வரி:-
நிறந்தீட்டுங்கள் - 03
இளஞ்சிட்டுக்கள்,
தினக்கதிர்,
த.பெ.எண்:- 06
மட்டக்களப்பு.

கடந்த வாரம் நிறந்தீட்டுங்கள் பகுதிக்கு சிறந்த முறையில் நிறம் தீட்டிப் பரிசு பெறுபவர்:-
தி.ஷனா
20, புதிய வீதி
ஆண்டு-2s
மட்/புனித மிக்ளேகல் கல்லூரி

### பாராட்டப்படுபவர்கள்

ச.ரமணன்
ஆண்டு-8B
மெதடிஸ்த மத்திய கல்லூரி

ஆ.பிரியராஜ்
ஆரையம்பதி
இ.மி.க வித்தியாலயம்.

மதன்ராஜ்
மாமாங்கம்

**பரிசுக்காக தெரிவு செய்யப்படுபவரின் பணப்பரிசு காலக் கிரமத்தில் தங்கள் பெயருக்கு அனுப்பி வைக்கப்படும்**

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு
– திருக்குறள் –

## வாசகர் நெஞ்சம்

### ஏன் இப்படிச் செய்கிறார்கள்?

18.06.2001 ஆம் திகதி றேடியோச் செய்தியில் விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையாக மாற்றி அமைக்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இச் செய்தியில் கூட மா, சீனி, பாண் போன்ற பொருட்கள் விலைக் கட்டுப்பாட்டுக்கு இல்லை என்பது வருத்தத்துடன் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் மட்டக்களப்பு விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு இவை கட்டுப்பாடாகத் தெரிவது ஏன்? கடந்த 2 வாரத்தில் மாவிலை கூட்டி விற்றதாக சில வர்த்தகர்கள் தண்டிக்கப்பட்டனர். இது ஏனென்றுதான் இன்னும் புரியாதிருக்கிறது.

**ரீ.கலாமோகனி**
**மார்க்கட்**
**மட்டக்களப்பு**

### உறுகாம பஸ்ஸில் ஆண்கள் புறக்கணிப்பு

உறுகாமமிருந்து வாழைச்சேனை நோக்கி பின்னேர வேளையில் செல்லும் பஸ்ஸில் கண்டிப்பாக ஆண்கள் மட்டும் புறக்கணிக்கப்படுவது வழமையாகி விட்டது. என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அதாவது கிரானில் தையல் பயிற்சி வகுப்பு முடிவடைந்து காத்திருக்கும் பெண் யுவதிகளை மட்டுமே ஏற்றிக் கொண்டு சாரதியும் நடத்துனரும் சேட்டை செய்து கொண்டு செல்வதாக தெரியவருகிறது. இவ்விடயம் மக்களிடையே பரபரப்பாகப் பேசப்படுகின்றது. இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? என்பது பொறுமையுடன் காத்திருக்க வேண்டியதாயுள்ளது.

**மு.நிசாந்தினி,**
**பிரதான வீதி,**
**கிரான்.**

### விதிகளை மீறிய போட்டி

மண்முனை வடக்குப் பிரதேசத் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் சுற்று நிருபம் மீறப்பட்டுள்ளது குறிப்பாக நாடகப் போட்டிகளில் பக்க சார்பாகத் திணைக்கள அதிகாரிகள் நடந்துள்ளார்கள் எனக் கூறத் தோன்றுகிறது. ஏனென்றால், ஏற்கனவே மேடையேற்றப்பட்டதும் பரிசையும் பெற்றதுமான 'கிழக்கு வானம்' என்னும் நாடகம் 'நெஞ்சம் பொறுக்குதில்லையே' என்ற பெயரில் அரங்கேற்றப்பட்டது. சுற்று நிருபமானது ஒரு நாடகத்தின் தழுவலோ அல்லது மறுபிரதியோ இல்லாமல் புதியதொன்றாக இருக்க வேண்டும். சுற்று நிருபமானது சினிமா பாடல்கள் அல்லது [illegible] பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. சுற்று நிருபமானது நாடக உரையாடல்கள் நியமத் தமிழில் அமைந்திருக்க வேண்டும். இவ்விதிகள் மேற்படிப் போட்டியில் வெளிப்படையாக மீறப்பட்டன.

இவை தொடர்பாகப் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த அனைவரும் மேன் முறையீடு செய்திருந்தோம். அப்படி இருந்தும் எமது பிள்ளைகளுக்கு பதில் எழுத்து மூலம் கிடைக்கவில்லை. வலய மட்டப் போட்டிகள் எவ்வித ஆரவாரமுமின்றி நடத்தப்பட்டன. எமது மேன் முறையீடுகள் தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் தெரியவந்தது. எமது மேன்முறையீடு குறித்த பாடசாலையின் அதிபரிடம் கையளிக்கப்பட்டதாக அறிகின்றோம். ஏன் இந்தப் பார பட்சம்? போட்டிகள் பிள்ளைகளின் திறனை வளர்ப்பதற்காகவே தவிர தங்கள் அரசியற் செல்வாக்கை வளர்க்கவா? இந்த பாரபட்சமான தீர்ப்பினால் எமது பிள்ளைகள் மனதளவில் தாக்கப்பட்டுள்ளார்கள். தினக்கதிரே புதையுண்டு போயுள்ள இவ் அக்கிரமத்தை நீயாவது உலகுக்கு வெளிப்படுத்துவாயா?

**உண்மையுடன்**
**பாதிக்கப்பட்ட மாணவர்களின்**
**பெற்றோர்கள்.**

### பெரியநீலாவணையில் வடிசாராய ஒழிப்பில் ஈடுபடும் விழிப்புக் குழு!

கல்முனைப் பிரதேச தமிழ் பிரிவிற்குட்பட்ட பெரிய நீலாவணைக் கிராமத்தில் வடி சாராய உற்பத்தி, விற்பனை, மண் அகழ்வு போன்ற சமூகத்திற்கு கேடு விளைவிக்கும் செயல்களை முற்றாக ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் விழிப்புக் குழு மேற்கொண்ட நடவடிக்கையினால் இக்கிராமத்தில் வடி சாராய ஒழிப்பு முற்றாக தடுக்கப்பட்டுள்ளது.

மேலும் விழிப்புக் குழுவினர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், ஆலய பரிபாலன சபையினர், சமுர்த்தியைச் சார்ந்தோர் ஆகியோரின் வழிகாட்டலில் செயற்பட்டு வருகின்றனர். இவ்விழிப்புக் குழு மக்களுக்கு விழிப்பூட்டும் குறிப்பாக இவ்வடிசாராயத்தினால் நாளாந்தம் ஏற்படும் உயிராபத்துக்களையும் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளையும் சித்தரிக்கும் முகமாக கருத்தரங்குகளையும், நாடகங்களையும் நடத்தி வருகின்றது.

விழிப்புக் குழுவினரின் இந்த அதிரடி நடவடிக்கையினால் பெரும்பாலானோரின் பாராட்டைப் பெற்றுள்ளனர். இன்றைய காலகட்டத்தில் வடிசாராய உற்பத்தி முற்றாக ஒழிக்கப்பட வேண்டிய தீவிர முயற்சியுடன் விழிப்புக் குழு செயற்படுவது பாராட்டத் தக்கது.

ஒரு சிலரைத் தவிர வடிசாராய உற்பத்திக்கு பொது மக்கள் தரப்பில் போதியளவு ஆதரவு இருப்பதனால் வடிசாராயம் ஒழிக்கப்படவேண்டிய செயற்பாட்டில் விழிப்புக் குழுவினர் தொடர்ந்தும் இதய சுத்தியுடன் தோல்வியைக் கண்டு துவண்டுவிடாமல் நாள் தோறும் மனித வர்க்கத்தை பலி கொள்ளும் இந்த வடிசாராய உற்பத்தியை இல்லாதொழிக்க எல்லோரும் ஒன்று பட்டுச்செயல் பட வேண்டும்.

**எட்வேட் நிஸாந்தன்**
**பெரிய நீலாவணை**




## 2001ம் ஆண்டுக்கான ஹொலி பீல்ட் வெற்றிக் கிண்ணம்

(எம்.உ.கந்தீபன்)

இலங்கை அவதானிப் போர் சங்கம் ஹொலி பீல்ட் (HOLY FEILD) விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் 6வது வருட நிறைவையொட்டி கடின பந்து சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் 22.06.2001 (வெள்ளி) மிக விறுவிறுப்பாக நடைபெற்றது. இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற விக்டோரியா ஜிம்கானா ஆகிய இரு விளையாட்டுக் கழகங்களும் மோதிய போது ஜிம்கானா விளையாட்டுக் கழகம் 30 ஓவர்களுக்கு 120 ஓட்டங்களும் 8 விக்கட்டுகளையும் பெற்று இரண்டு ஓட்டங்களால் வெற்றி பெற்று ஹொலி பீல்ட் கிண்ணத்தை தட்டிக் கொண்டது. இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக எம்.எச். பிறிம்ஷாத் தொடரின் சிறப்பாட்டக்காரராக பிரேவ் லீடர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஏ.எம்.காலிடீன் தெரிவாகினர். விக்டோரியா விளையாட்டக் கழகம் 30 ஓவர்களுக்கு 119 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஜிம்கானா விறுவிறுப்பாக விளையாடி இறுதிக் கட்டத்தில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்கு பிரதம அதிதியாக ஹொலிபீல்ட் விளையாட்டுக் கழகத்தின் தேசிய தலைவர் எம்.எம்.ஜெஸ்மின் விசேட அதிதியாக காரைதீவு அதிரடி முகாம் பொறுப்பதிகாரி முகமட் றிஸ்வான் நிமால் பெரேரா (கல்முனை பொலிஸ் உதவி அத்தியட்சகர்) கௌரவ அதிதியாக பிரிலியன் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஐ.எல். சம்சுதீன் சிறப்பதிதியாக சனிமூன் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் யு.எம்.கனிபா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கொடி தினத்தை முன்னிட்டு 20.06.2001 அன்று கோறளைப்பற்று பிரதேச செயலாளர் எஸ். புண்ணிய மூர்த்திக்கு முதல் கொடியினை பிரதேச சம்மேளனத் தலைவர் ஆர்.இலங்கேஸ்வரன் வழங்குவதனையும் அருகில் கோரளைப்பற்று இளைஞர் சேவைகள் அதிகாரி எஸ்.அருளானந்தம் நிற்பதனையும் மற்றும் கிண்ணையடி வெண்ணிலா இளைஞர் கழகத் தலைவர் எம்.நந்தகுமாரும் ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்களும் காணப்படுகிறார்கள்.

## நாவலர் ஈழ மேகம் நினைவு தினப் போட்டி

(கல்முனை மத்திய நிருபர்- ஜெஸ்மி)

அண்மையில் சம்மாந்துறை கல்விக் கோட்டப் பாடசலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட ஈழமேகம் பக்கீர்த் தம்பியின் நினைவு தினப் போட்டி முடிவுகள்

**பேச்சுப் போட்டி**

கனிஷ்ட பிரிவு

1ஆம் இடம்-சீ.என்.நிலோபறா -சது/அல் முனீர் வித்தியாலயம்

2ம் இடம்-எஸ். ரீ.சன்பறா சது/ முஸ்லீம் மத்திய மகாவித்தியாலயம்

3ம் இடம்- எம்.ஆர். எவ்.நசூறா- சது/ அல் அஷ்கர் வித்தியாலயம்

சிரேஷ்ட பிரிவு

1ம் இடம்-எஸ்.ரி.பிரிதெனஸ் ச/து முஸ்லீம் மத்திய மகா வித்தியாலயம்

2ம் இடம்-எச்.எம்.தஸனீம்- சது/ முஸ்லீம் மத்திய மகாவித்தியாலயம்

3ம் இடம்-எம்.ஐ. சித்தி முஸம்மினா-சது/தாருஸ் சலாம் வித்தியாலயம்

**கவிதைப் போட்டி**

சிரேஷ்ட பிரிவு மட்டும்

1ம் இடம்- எம்ஐ.கன்சுல் இக்றாமா- சது/முஸ்லீம் மத்திய மகாவித்தியாலயம்

2ம் இடம்-ஏ.ஆர்.றிஸானா- சது/ தாருஸ் சலாம் வித்தியாலயம்

3ம் இடம்- கே.றிம்ஷியா -சது/அல் மர்ஜான் 'முஸ்லீம் மகளிர் வித்தியாலயம்

**இசையமைத்துப் பாடுதல்**

கனிஷ்ட பிரிவு மட்டும்

1ம் இடம்-எஸ்.எம்.அஸ்ஸான்- சது/ அல் அமீர் வித்தியாலயம்

2ம் இடம்-எம்.ஐ.றபீஸா ஹம்சத்- சது/முஸ்லீம் மகளிர் வித்தியாலயம்

3ம் இடம்- எம்.ஏ.மும்தாஜ் - சது/ அல் அஸ்கர் வித்தியாலயம்.

### சமூகத்திற்கு சிறந்த சேவை செய்யும் தினக்கதிர்

நான் தினக்கதிர் பத்திரிகையின் சந்தாதாரர் தினக்கதிர் பத்திரிகையை கடந்த நான்கு மாதங்களாக, தொடர்ந்து படித்து வருகிறேன். உங்களால் முடிந்தளவு தேவையான செய்திகளையும், கல்முனை மட்டக்களப்பு பிராந்தியங்களில் நடக்கும் விடயங்களையும் துரிதமாகத் தந்து சிறப்பிப்பது என்னைப் போன்ற வாசகர்களுக்குப் போதுமானது.

மேலும், வாசகர் நெஞ்சம் பகுதியில் வாசகர்கள் அதாவது மக்களின் பிரச்சினைகள், குற்றச்சாட்டுகள் அநீதிகளை வெளிக் கொணரல் போன்றவற்றைப் பிரசுரித்து,சம்மந்தப்பட்டவர்களின் பொய்யான மறுப்பையும் பிரசுரித்து மக்களுக்கு சேவையாற்றுகின்றீர்கள். எதிர் காலத்தில் அவர்கள் திருந்தப் பார்ப்பார்கள் அல்லது பிழையைக் குறைத்துக் கொள்வார்கள்.

இவ்வகையில் உங்கள் பத்திரிகை எமது பிரதேச [illegible] சமூகத்திற்கு நல்ல சேவை புரிகின்றது. கல்முனைப் பிரதேச [illegible] ஏழை மக்களின் குறைபாடு அதுவும் நீண்ட நாட்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் குறைபாட்டினை நிவர்த்தி செய்கிறது.

**ஏ.சிவஅன்பு**
**யாட் றோட்**
**கல்முனை.**
**2001ம்**

### மாணவர் புத்தக கண்காட்சி

(காரைதீவு நிருபர்)

புதிய கல்விச் சீர்திருத்தப்படி காரைதீவு சண்முகா வித்தியாலயத்தில் மாணவர் புத்தகக் கண்காட்சி வெகு சிறப்பாக வியாழனன்று நடைபெற்றது. பாடசாலை அதிபர் வெ.ஜெயநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கண்காட்சியில் காரைதீவு பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திருமதி ம.சத்தியதேவா உட்பட பல கல்வி அதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர். பொதுவாக ஒரு கண்காட்சியும், விஞ்ஞான பாடத்திற்குப் புறம்பாக ஒரு கண்காட்சியும் இப்போது மண்டபங்களில் கூடிய அதிகமான காட்சிப் பொருட்களுடன் வைக்கப்பட்டிருந்தன.

# அவசரகாலச் சட்டம் தோற்றால் புலிகள் மீதான தடை செயலற்றுவிடும்

(நமது நிருபர்)

**நீதியமைச்சர் பட்டி வீரக்கோன்**

**நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டம் தோற்கடிக்கப்படுமாயின் விடுதலைப் புலிகள் மீதான தடை செல்லுபடியற்றதாகிவிடும் என்று நீதித்துறை அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.**

வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியி லேயே அவர் இவ்வாறு கூறியி ருக்கிறார்.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ்தான் விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்ய ப்பட்டுள்ளது. புலிகளுக்கு எதிரான சகல நடவடிக்கைகளும் அந்தச் சட்டவிதிகளின் கீழ்தான் மேற் கொள்ளப்படுகின்றன.

அவசரகாலச் சட்டம் தோற்கடிக்கப்படுமானால் தற்போது அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கை திகளைத் தொடர்ந்தும் தடுத்து வைக்கமுடியாத நிலை ஏற்படும். அவர்கள் மீதான வழக்குகள் உட்பட சகல நடவடிக்கைகளும் செயலற்றதாகிவிடும். என்றும் அமைச்சர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பொ.ஐ.மு அரசுக்கான ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் விலக்கிக் கொண்டதை அடுத்து நாடாளுமன்றில் அரசு தனது பெரும்பான்மையை இழந்துள்ளது. அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை எதிர்க் கட்சிகளால் தோற்கடிப்படும் நிலை இருப்ப தாகச் சுட்டிக் காட்டப்படுகிறது

## பத்திரிகையாளர் மீதான, அச்சுறுத்தலுக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஊடகவியலாளர் டி.சிவராம் (தராகி) அவர்களிற்கு அரசாங்கம் உடனடியாக பாது காப்பு வழங்க வேண்டும் அவரிற்கு ஏதாவது நடக்குமானால் அதற் குரிய முழுப் பொறுப்பு இலங்கை அரசையே சாரும். என யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் என குறிப்பிடும் அமைப்பு நேற்று அனுப்பி வைத்துள்ள அதில் மேலும் கூறப்பட்டு ள்ளதாவது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் தமிழ் பத்திரிகையாளர்களை துன்புறுத்துவதும் சிறைகளில் அடைத்தும் இலங் கையில் சர்வதிகார நிகழ்வாக தொடர்கிறது. இதைவிட யாழ்ப்பாண ஊடகவியலாளர் நிமல ராஜனின் படுகொலைளிலும் அரசின் ஆசீர்வாதம் நிச்சியமாக இருக்க .அரசு தமிழ் பத்திரிகை யாலளர்கள் மீதான அச்சுறுத்த ல்களையும் கொலைப் பயமுறுத் தல்களையும் உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். என தெரி விக்கப்பட்டுள்ளது.

## வல்லுறவு சந்தேக நபர் பிடிப்பட்டார்

(நமது நிருபர்)

கோரகல்லிமடுக் கொல னியில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் ஒருவர் பிடிபட்டுள்ளார்.

கோரகல்லிமடு கணேஸ் விளையாட்டுக் கழக உறுப் பினர்கள் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையினால் இந்த இளை ஞர் பிடிப்பட்டுள்ளார்.

இவரைப் பிடித்த இளை ஞர்கள் சம்பந்தப்பட்ட பிரிவு கிராம சேவையாளரிடம் ஒப்படைத்து ள்ளனர். கிராமசேவகர் பொலி ஸாரிடம் ஒப்படைக்க நடவடிக் கை எடுத்ததாக தெரிவிக்கப்படு கிறது.

## கைப்பற்றப்பட்ட.......

அவற்றின் விபரம் வருமாறு:- ரி 56 இரண்டு ரக துப் . பாக்கி 1, ரி 56 பட்மொடல் துப் பாக்கி 1, நடுத்தர ரவைகள் 304, நடுத்தர ரவைகள் இணைப்பிக ளுடன் 316, ரவைக் கூடுகள் 8, மழைக்கவசம் 1, இராணுவச் சப் பாத்து 1 சோடி, ரவைக் கூடு தாங்கி அணிகள் 3, குண்டுகள் 5.

## எமக்கு எதி....................

கொழும்பு வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

முஸ்லிம் காங்கிரஸ் சமாதானத்தை விரும்பும் கட்சி. முஸ்லிம் இளைஞர்களை ஆயுதம் ஏந்தவிடாமல் ஜனநாயக அரசியலில் ஈடுபடுத்திய கட்சி. தேர்தல்கள் மூலம் தேசியக் கட்சிகளை ஆட்சியில் அமர்த்த உதவி வந்த கட்சி. இப்படி இருக்க முஸ்லிம் காங்கிரஸை அழிக்கச் சதிகள் தொடர்கின்றன. போரா ளிகள், அபிமானிகளின் உதவி யுடன் இத்தகைய சதிகளை வெற்றி கொள்வதற்கான போராட்டத்தில் வீதியில் இறங்கிப் போராட முஸ்லிம் காங்கிரஸ் தலைமை த்துவம் தயங்காது என்றும் அவர் தெரிவித்தார்'


## C D விற்பனைக்கு

புதிய பழைய தரமான தமிழ், ஹிந்தி, ஆங்கில ,பக்திப் பாடல்கள் அடங்கிய வீடியோ, ஓடியோ சீடிகளும்,தரமான வீடியோ படப்பிடிப்புக்களுக்கும், வீடியோ கொப்பிகளை சீடிக்கு மாற்றிக் கொடுக்கவும், தரமான வீடியோ பிரதிகளை வாடகைக்குப் பெறவும், ஓடியோ நாடாக்களை பதிவு செய்து கொள்ள வும்,இவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

NEW VIDEOS PATHY

புதிய வெளியீடுகள்

வித்தியாசகரின் இசையில்,

'தில்'

தேனிசைத் தென்றல் தேவாவின் இசையில்

'கலகலப்பு'

NEW VIDEOS PATHY
267,TRINCO RAOD,
BATTICALOA

T.P.065-26221

ADVT


## நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றி பெறுவோம்

(நமது நிருபர்)

**பிரதமர் தூளுரை**

ஐ.தே.கட்சியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பி க்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரே ரணையை விரைவில் பாராளு மன்றத்தில் விவாதத்திற்கு எடுக்கு மாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பௌத்த விகாரை ஒன் றில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரை நிகழ்திய பிரதமர் மேலும் கூறுகையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஆறு வருடங்கள் அதன் அதிகாரத்தில் இருக்கவே செய்யும். எந்தக் கட்சியினாலும் ஆட்சியை கலைக்க முடியாது.

ஐ.தே.கட்சியினால் முன் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கை யில்லாப் பிரேரணையில் நாம் வெற்றி பெற்றே தீருவோம்.எனவே நிலையல் கட்டளைப் பிரகாரம் விவாதத்தினை ஆரம்பிக்க வேண்டும்.

இதே சமயம் ஐ.தே.கட் சியும் ரெலோவும், செய்து கொண்ட உடன்படிக்கை பற்றியும் பகிரங்கப் படுத்த வேண்டும் எனவும் கேட் டுள்ளார்

## பாதுகாப்பு வழங்குமாறு மகேஸ்வரன் எம்.பி. கோரிக்கை

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் செல்வத ற்கான அரச பாதுகாப்பு தமக்கு வழங்கப்படாததால் அங்கு செல்ல முடியாதிருப்பதாகவும் எனவே உடனடியாக பாதுகாப்பு வழங்க ப்பட வேண்டுமெனவும் ஐ.தே.கட் சியின் யாழ். மாவட்ட எம்.பியான தி.மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வியாழனன்று மகேஸ்வரன் எம்.பி. விடுத்த இந்தக் கோரிக்கை தொடர்பாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையிடம் தெரிவிப்பதாக சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க கூறியிருக்கிறார். ஈ.பி.டி.பி. அமைப்புக்கு 5 பிக் -அப் வாகனங்களும் 300பேருக்கான ஆயுதங்களும் சட்டவிரோதமாக வழங்கப்பட்டிருப்பதாகவும், ஈ.பி.டி.பி யினரால் தமக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் மகேஸ்வரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் சிறப் புரிமைப் பிரச்சினையை எழுப்பிய போது தெரிவித்தார்.

## இன்று வெளி வீதியுலா

(நமது நிருபர்)

வந்தாறுமூலை சிறி மகா விஷ்னு ஆலயத்தின் மூன்றாவது உற்சவ நாளான இன்று அன்னா பிஷேகம் இரவு சுவாமி வெளி வீதியுலா என்பன இடம் பெறும் என இன்றைய உபயகாரர்களான புதூர் குடியினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் விசேட நாத ஸ்வரக்கச்சேரி, சமய சொற்பொ ழிவுகள். என்பனவும் இடம் பெற வுள்ளது.

## தினக்கதிர்...

அதிதியாக தினக்கதிர் பிரதம ஆசிரியர் எஸ்.எம். கோபால ரெத்தினம் கலந்து கொண்டார்.

அவர் அங்கு உரையா ற்றுகையில் தினக்கதிர் பத்திரிகை தனது ஓராண்டு நிறைவை தாண்டியுள்ளது.இப் பத்திரிகையை வளர்க்க வேண்டிய பொறுப்பு வாசகர்களிடம் தான் உள்ளது. இன்றைய விளையாட்டிலும் ஏற்க னவே இடம் பெற்ற விளையா ட்டுக்களிலும் பங்கு பற்றிய அனைவரையும் பாராட்டுகிறேன் என்றார்.

மட்டக்களப்பு மாவட்ட கால் பந்தாட்டச் சங்க தலைவர் இராஜன் சத்தியமூர்த்தி தமது ரையில் துணிச்சலான செய்தி யினை சுடச் சுட எமக்க வழங்கிக் கொண்டிருக்கும் தினக்கதிரின் சேவை எமது மண்ணிற்கும் மக் களுக்கும் இன்றியமையாதது என்றார்.

வெற்றியீட்டியவர்களு க்கான வெற்றி கிண்ணத்தையும் பணப் பரிசில்களையும் தினக்கதிர் பிரதம ஆசிரியர் எஸ்.எம். கோபா லரெத்தினம் வழங்கிவைத்தார்.

போட்டியின் நடுவராக மக்கள் வங்கி உத்தியோகத்தர் ஏ.கே.பாறூக் கடமையாற்றினார். கால் பந்தாட்ட சங்க பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண் டனர்.

## மத்திய கல்லூரி சாதனை

(க.ஜெகதீஸ்வரன்)

இவ் வருடத்திற்கான தமிழ்த் தினப் போட்டியில் மட்ட க்களப்பு செங்கலடி மத்திய கல்லூரி விஷேட கூத்தில் முத லாம் இட த்தைப் பெற்றுள்ளது.

மாகாண மட்டத்திற்கு தெரிவாகியுள்ள இக் கூத்தினை ஆசிரியர் ஏ.சி.பிரான்சிஸ் நெறி யாள்கை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்டெடுக்கப்பட்ட சாவிக் கோர்வை

வீதியில் கண்டெடு க்கப்பட்ட சாவிக் கோர்வை ஒன்று 'தினக்கதிர்' அலுவலகத்தில் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரங்களை உறுதிப்படுத்தி சாவிக் கோர்வையை பெற்றுச் செல்லவும்.

## காத்தான்குடியில்.....

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும் இவரிடமிருந்து பிஸ்ரல் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவி த்துள்ளன.

இறந்த இளைஞரின் சடலம் விஷேட அதிரடிப் படை யினரால் கொண்டு செல்லப்பட்டு முகாமில் வைக்கப்பட்டதாகவும் பொது மக்கள் சடலத்தைப் பார் வையிட அனுமதித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்க ளப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எல்.அப்துல் கபூர் முகாமிற்கு சென்று உயிரிழந்த இளைஞரின் சடலத்தை பார்வையிட்டுள்ளார்.

## இருதயபுரத்தில்....

சிகிச்சை பெற்று வருவதாக வை த்தியசாலை வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

ஜெயந்திபுரம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த காமினி அமர சிங்க (இல.26507) என்பவரே காயமடைந்தவர்.

இவர் பொருட்கள் வாங் கிக் கொண்டு வரும் போதே சுடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொ டர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த படையினர் தேடுதல் நடவடி க்கைகளை மேற் கொண்டதாகவும் சரமாரியான துப்பாக்கி வேட்டு க்களை தீர்த்ததாகவும் இதனால் பொது மக்கள் அச்சமடை ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கலை கலாசார....

துசியந்தன் தலைமையில் நடை பெற்ற இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப் பாளர் கே.தவராஜா கலந்து கொண்டார்.

'தினக்கதிர்' இணை ஆசி ரியரும் பொது முகாமையா ளருமான கோ.றுஷாங்கன் இந் நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் போட்டி களில் பங்கு பற்றியவர்களுக்கான பரிசில்கள் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன் போட்டியில் பங்கு பற்றியவர்களது பாடல் நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இதேவேளை கவிஞர் நா. ஏரம்பமூர்த்தி ( எருவில்மூர்த்தி) அண்ணாவியார் வீ.இராசமாணி க்கம் இ.நாகலிங்கம் (எருவில் கலிங்கன்) ஆகிய கலைஞர்கள் உதவி நிருவாக கலைக் குழு வினரால் பொன்னடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.